Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -16 02-11-2003 ஞாயிற்றுக்கிழமை ஓசை 257

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கனினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்

Jaffna Road,
Kilinochchi.
யாழ் சாலை,
(சி-862அ) கிளிநொச்சி.

## மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பிற்காக

## காணி,நிதி, சட்டம்-ஒழுங்கு, நீதி ஆகியவற்றுக்கான

# முழு அதிகாரங்களுடன் கூடிய இ.த.அ.சபை தேவை!

## புலிகளின் திட்ட நகல் வரைவு கோருகிறது

(கிளிநொச்சி)

**விடுதலைப்புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையில் விடுதலைப்புலிகளால் நியமனம் பெறுவோர் பெரும்பான்மை அங்கத்தவர்களாக இருப்பதோடு, அச்சபை மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, மற்றும் தற்பொழுதுள்ள சேவைகளையும் வசதிகளையும் மேம்படுத்தி உயர்த்தல் உள்ளடங்கலான அபிவிருத்தி, வரிவிதித்தல் உள்ளடங்கலான வருவாய் ஈட்டல், வருமானம், தீர்வையும் சுங்கவரியும், சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணிதொடர்பான அதிகாரங்கள் உள்ளடங்கலான வடக்கு கிழக்கை ஆளுகை செய்வதற்கான அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருத்தல்வேண்டும் எனத் தெரிவிக்கின்றது.**

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இத்திட்டவரைவானது 23 சரத்துக்களையும், பல உப விதிகளையும் கொண்டதாகவுள்ளது. இத்திட்ட வரைவின் பிரகாரம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வடக்கு -கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் விடுதலைப்புலிகளின் நியமனதாரிகளே பெரும் பான்மையாக இருப்பர். இச் சபையின் தலைவர், பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுவார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித விவகாரங்கள் குழு தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் மனித விவகாரங்கள் ஒன்றிணைப்பு அலுவலகத்தைச் சேர்ந்த குழுவொன்று கிளிநொச்சியிலுள்ள அரசியல் துறை நடுவப்பணியகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. இதில்



நேற்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

ஐ.நா.மனித விவகாரங்கள் ஒன்றிணைப்பு அலுவலகத்தைச் சேர்ந்த கரோலின் மக் அக்கி மிக்கெயில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முரண்பாடுகள்காணப்படும்போதும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படும்

### புலிகளின் திட்டவரைவு குறித்து அமைச்சர் பீரிஸ்

இருதரப்பினரதும் நிலைப்பாடு சம்பந்தமாக கருத்து வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் இவ் இரு பிரேரணைகள் சம்பந்தமாக ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்கு நேரடிப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காணமுடியுமென அரசாங்கம் நம்பியுள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அடுத்த வருட முற்பகுதியில் விரிவான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வகை செய்யும் விதத்தில் இம்மாதத்தில் அல்லது டிசெம்பரில் பூர்வாங்க கூட்டமொன்றை ஒழுங்குசெய்யுமாறு அரசாங்கம் கேட்டுக்கொள்வதாகவும் கூறியுள்ளார். பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே அரசின் ஸ்திரமான நிலைப்பாடாகும். தற்போதைய யுத்த நிறுத்தம் இரண்டு வருடங்களுக்கு கடைப்பிடிக்கப்பட் டுள்ளதெனவும்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் திட்டவரைவு குறித்து உடன் எதனையும் கூறவிரும்பவில்லை

### - அமைச்சர் ஹக்கீம்

(லண்டன்)

விடுதலைப்புலிகளின் வடக்கு-கிழக்கிற்கான மாற்றுத்திட்ட வரைவு சம்பந்தமாக தாங்கள் எதனையும் உடனடியாக சொல்ல விரும்பவில்லையென முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இதைப்பற்றி தாம் ஆராய்ந்து கொண்டிருப்பதாக தெரிவித்த அவர் முஸ்லிம்களைப் பொறுத்த வரை எதிர்பார்த்ததைப் போல எதுவுமே இதில் உள்ளடக்கப்படவில்லை என்பது எங்களின் முடிவு.

இந்த அடிப்படையில் நாங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இ.நி.சபையின் திட்டவரைவு சமாதான முயற்சியில் முக்கிய முன்னேற்றம்

### ஐரோ.ஒன்றிய நாடுகளின் தூதரகத் தலைவர்கள்

(லண்டன்)

சிறிலங்கா அரசுக்கு விடுதலைப் புலிகளினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக சபைக்கான திட்ட வரைவுகள் சமாதான முயற்சியில் ஒரு முக்கியமுன்னேற்றப் படியினைக் பிரதிபலிப்பதாக கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதரகத்தின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத் தூதரகத் தலைவர்களினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில்,

இலங்கையின் அனைத்து சமூகங்களும் ஏற்கும் வகையிலான

(12ஆம் பக்கம் பார்க்க)

## இ.நி.திட்டவரைவு தொடர்பாக சு.க. இன்று கூடி ஆராயும்

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டம் அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இதனடிப்படையில் இன்று சனாதிபதி தலைமையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் முக்கியஸ்தர்கள் ஒன்றுகூடி தமது கருத்தை வெளியிடுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னர் கட்சியில் விசேட அறிக்கையும் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி நேற்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## இ.நி.குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகளை அரசும், அனுசரணையாளர்களுமே எடுக்க வேண்டும்

### ஊடகவியலாளர் மாநாட்டில் சு.ப.தமிழ்ச்செல்வன்

எங்களைப்பொறுத்தவரைஇடைக்கால நிர்வாகம் சம்பந்தமான ஆலோசனைகள் அடங்கிய வரைவைக் கையளித்துள்ளோம். எங்களது கடமைகளைச் சரிவரச் செய்து தமிழ் மக்கள் சார்பாக நாங்கள் இந்த வரைவைக் கையளித்துள்ளோம். அடுத்தகட்ட நடவடிக்கைகள் அரசாங்கத்தினதும் அனுசரணையாளர்களதும் கையில்தான் உள்ளது என நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள் கலந்துகொண்ட இம்மாநாட்டில் ஊடகவியலாளர்களின் கேள்விகளும் அவரளித்த பதில்களும் வருமாறு.

● இடைக்கால நிர்வாகத் திட்டத்தில் நிதி மற்றும் நிலம் உங்களது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அது எந்த வகையில் இருக்கும்?

நாம் இடைக்கால நிர்வாக சபை ஆலோசனையில் இதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். வடக்குக் கிழக்கை உள்ளடக்கிய தமிழர் தாயகப் பிரதேசத்தில் பூரண அதிகாரமுள்ள ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுவதாக இருந்தால் நிலம் என்பது மிகவும் அவசியம். ஏனெனில் நிலப்பறிப்புகளும் தமது சொந்த இடங்களில் இருந்து மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப் பட்டமையும் மக்கள் வெளியேறி யிருக்கின்றமையும் முக்கியமான விடயமாக இருக்கிறது. அந்த வகையில் நிலம் தொடர்பான அதிகாரம் இந்தக் கட்டமைப்புக்குள் முழுமையாக வரவேண்டும் என்பது அவசியமாகும்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் தேவை

ஜெயபுரத்தில் உள்ள இள முருகன் நிழற்படப் பிரதியாக்கல் தட்டச்சு நிறுவனத்திற்கு மேற்படி அனுபவமுள்ள ஒருவர் தேவை 15.11.2003 ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும். (சம்ப ளம் நேரில்) நிர்வாகி. (3134)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

எம்மிடம் மொத்தமாகவும் சில் லறையாகவும் பெற்றுக் கொள்ள லாம். உணவக ஓடருக்கு சுத்தம் செய்து கொடுக்கப்படும். இடம்: 155ஆம் கட்டை, விவேகானந்த நகர், கிளிநொச்சி. புலிகளின் குரல் நடுவப்பணியக முன் ஒழுங்கை (தூரம் 300M). (3137)

### N. E. C

இம்முறை கிளிநொச்சி புலமைப் பரிசு ஆண்டு 5ற்கான மாதிரி வினா விடை வகுப்புக்கள் கொழும்பு பிர பல ஆசிரியரால் ஆரம்பப் பதிவு களை 05.11.2003 இற்கு முன் செய்து பதிவுப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும். நிர்வாகம். (3143)

### தவறிவிட்டது

சபாநாதன் செந்தூரன் ஆகிய எனது அடையாள அட்டை பாண்டியன் குளத்திற்கும் ஒட்டங்குளத்திற்கும் இடையில் 29-10-2003 அன்று தவறி விட்டது. இதனைக் கண்டெடுத்தவர் கள் மல்லாவி ஈழநாதம் விளம்பர முகவர் நிலையத்தில் ஒப்படைக்கு மாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (2934)


# மகளிர் படையணியின் வரலாற்றைச் சித்தரிக்கும் அக்கினிப் பறவைகள் விவரணம் வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

மகளிர் படையணியின் வரலாற் றைச் சித்தரிக்கும் அக்கினிப் பறவைகள் (பாகம்1) விவரணச் சித்திர வெளியீட்டுவிழா நேற்று மாலை 5.15 மணிக்கு கிளிநொச்சி துாாயவன் அறிவியற்கல்லூரி மண்ட பத்தில் நடைபெற்றது.

மகளிர் நிதர்சனப் பொறுப்பாளர் பிரேமளா தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணி மனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், திருமதி பொன்.தியாகம் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை செஞ்சோலை பொறுப்பாளர் ஜெனனி ஏற்றிவைத்தார். தொடர்ந்து வெளி யீட்டு வைபவ ஆரம்பநிகழ்வில் தலை மையுரையினையடுத்து வெளி யீட் டுரையினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புரையினை கேணல் பால்ராஜ் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையினை எழுத்தாளர் திருமதி ஆதிலட்சுமி சிவகுமார், விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் பே.பாலகுமரன், செல்வி. ஸ்ரீ.அருளானந்தம் ஆகியோர் நிகழ்த் தினர்.

அக்கினிப் பறவைகள் ஒளிநாடா வினை முதலாவது ஒளிப்பேழை யினை சோதியாப்படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்காவினால் கேணல் பால்ராஜ் அவர்களிடம் வழங்கப்பட்டது. தொடர்ந்து நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன் சிறப்புப் பிரதிகளை வழங்கினார்.

அடுத்து அக்கினிப்பறவைகள் விவரணசித்திரக் கலைஞ்களுக்கு தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், செஞ் சோலை பொறுப்பாளர் ஜெனனி ஆகியோர் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். திருமதி அம்புலி யின் நன்றியுரை யினையடுத்து அக்கினிப் பறவைகள் (பாகம்1) விவரணச்சித்திர ஒளிப் படக்காட்சி காண்பிக்கப்பெற்றது.

பெருமளவில் பொதுமக்கள் சிறப் புத்தளபதிகள், தளபதிகள், போரா ளிகள், இந்நிகழ்வில் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது. (சோ)






# வவு.வில் இரு கிராமங்களில் மீளக்குடியேற வாய்ப்பு

இராணுவ நடவடிக்கையின் போது வவுனியா குருக்கல் புதுக் குளம், சாலம்பைக்குளம் ஆகிய பகுதிகளில் புதைக்கப்பட்டு இருந்த வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ள தினால் மக்கள் மீளக் குடியமர முடியும் என்று இந்திய இராணுவ கண்ணிவெடி அகற்றும் பிரிவு வவுனியா அரச அதிபரிடம் சான்றித ழினை நேற்று வழங்கியது.

குருக்கல் புதுக்குளம், சாலம் பைக்குளத்தில் (நேற்றுமுன்தினம்) நடைபெற்ற விஷேட நிகழ்வில் வவுனியா அரச அதிபர் K.கணேஷ் மற்றும் மிலிந்த மொறகொட கன் சிடியூட் பிரதிநிதி நந்த கொட்ட கொட மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி இரண்டு கிராமங்களில் 1லட்சத்து 2ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் 467 வெடிபொருட் களினை தாம் அகற்றி உள்ளதாக அவர்கள் தெரிவித்து உள்ளனர்.

இந்த இரண்டு கிராமங்களிலும் மீளக் குடியமரவும், விவசாய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும் என்றும் அவர்கள் தெரிவித் துள்ளனர்.

# வரணியில் தனியார் காணியிலுள்ள தென்னை, பனை படையினரால் தறிப்பு

வரணியிலுள்ள தனியார் காணிகளிலிருந்து பனை, தென்னை போன்ற பயன்தரும் மரங்களை வெட்டி தம் விறகுத் தேவைக்காக வும், காவலரண் அமைக்கும் தேவைகளுக்காக படையினர் பயன் படுத்துவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அப்பகுதிகளில் தனியார் காணி களில் முகாம் அமைத்து தங்கி யுள்ள படையினர் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதால் தமது பிரதேச வளங்கள் மேலும் பாதிப்பிற்கு உள்ளாவதாக படையினர் தங்கியுள்ள தனியார் காணி களின் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக யாழ். இராணுவ படைத்தலைமை யகத்திற்குத் தாங்கள் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் கூறியுள்ளார். (33)

## -புங்குடுதீவு கடற்பரப்பில்-

# படையினரின் துப்பாக்கிச் சூட்டால் மக்கள் மத்தியில் பீதி

புங்குடுதீவு கடற்பரப்பில் கடந்த சில நாட்களாக படையினர் மேற் கொள்ளும் துப்பாக்கிப் பிரயோ கத்தால் அப்பகுதி மக்களிடையே பெரும் பீதி நிலவிவியுள்ளது.

இப் பிரதேச கடற்பரப்பில் இரவு வேளைகளில் படையினர் திடீர் திடீர் என செய்யும் இவ் நடவடிக்கைகளி னால் இரவு வேளைகளில் தொழிலுக் காகச் செல்லும் குடும்பத்தவர்களின் உறவினர்கள் மிகவும் பீதியுடனே இரவுப் பொழுதைக் கழிப்பதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் பகுதி கடற்றொழிலாளர் தொழி லுக்குச் செல்லும் போது கடற்றொ ழில் அனுமதி அட்டையைத் தமது மேற்சட்டையில் அணிந்திருக்க வேண்டுமென படையினரால் எச்சரிக் கப்பட்டிருப்பதால் தாம் மிகவும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (33)

## 'தவளை' வெற்றிவிழாவில் உதைபந்தாட்டம்

தவளைத் தாக்குதல் 10ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடை பெறும் விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டப் போட்டியும் இடம் பெறவுள்ளது. இதில் கரபந்தாட்டப் போட்டி மரதன் ஓட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளமை தெரிந்ததே. இப்போட்டிகளில் பங்குபற்ற விரும் பும் கழகங்கள் கிளிநொச்சியில் தமிழீழ விளையாட்டுக்கழக நடுவப் பணியகத்திலும் பூநகரியில் மன்னார் வீதி 4ஆம் கட்டையி லுள்ள வெண் புறா நிறுவனத் திலும் எதிர்வரும் 6ஆம் திகதிக்கு பதிவுசெய்து கொள்ளுமாறு விழாக் குழுவினர் அறியத்தருகின்றனர்.

## -ஊர்காவற்றுறை-பருத்தியடைப்பில் -

# மீளக்குடியேறிய மக்கள் தொழிலின்றிப் பெரும் துயரம்

(யாழ்பாணம்)

ஊர்காவற்றுறை பழைய பருத்தியடைப்புப் பிரதேசத்தில் மீளக் குடியேறியுள்ள சுமார் 50குடும்பங் களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் பல துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் இப்பகுதியில் மக்களை மீளக்குடியேற அனுமதித்த படையினர் இப்பகுதி மக்கள் மீன்பிடித்தொழிலுக்குச் செல்லும் கடற்கரையோரங்களை பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தி யுள்ளமையால் அப்பகுதிமக்கள் தொழிலின்றி அவலங்களுக்குள் ளாகியுள்ளனர். இதன் காரணமாக இப்பகுதியில் குடியேறியுள்ள மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாக அப்பகுதி பிரதேச செயலகம் கவலை தெரிவித்துள் ளது.

இவ்வாறான வறுமையால் இப் பகுதியில் வாழுகின்ற 90 பேர் கல்வி கற்கும் வயதினைஉடையோராக இருப்பினும் இதில் 36 பேர் பாட சாலை செல்வதில்லையெனவும் கூறப்படுகின்றது. (33)

# மணற்காட்டில் மணல் அகழ விதிக்கப்பட்டதடை நீக்கம்

வடமராட்சி கிழக்கின் மணற்காடு மற்றும்அதனையண்டிய பகுதிகளில் கட்டட வேலைகளுக்கான மணலை அகழ விதிக்கப்பட்டுள்ள தடை களை விலக்கிக் கொள்ள அப்பகுதி பொது அமைப்புக்கள் முன்வந்துள் ளன.

இதேவேளை காரணம் ஏதும் தெரிவிக்கப்படாமல் இடைநிறுத் தப்பட்டுள்ள 200இற்கும் அதிகமான மீனவ குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை மீள வழங்குதல்மற்றும் பின்தங்கியுள்ள இப்பிரதேசங்களுக்கான அடிப்படை வசதிகளை அரசு வழங்க முன்வர வேண்டும் எனவும் அப்பொது அமைப்புகள் கோரியுள்ளன.

கட்டுப்பாடற்ற வகையில் இப் பகுதிகளில் மணல் அகழ்வதைக் கட்டுப்படுத்தவும், புதிதாக மணல் பிட்டிகளை இனங்கண்டு அங்கிருந்து மணல் ஏற்றவும் ஏதுவாக மணற் காடு மற்றும் அதனை அண்டியுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஏழு பிரதி நிதிகள் கொண்ட குழுவொன்றும் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இப்பகுதிகளில் மணல் ஏற்றுவதற்கு கடந்த ஒருமாத காலத்திற்கு மேலாக உள் ளூர் பொது அமைப்புகளால் விதிக் கப்பட்டதடை நீக்கப்பட்டுள்ளதால், நிறுத்தப்பட்டுள்ளகட்டட நிர்மாணப் பணிகள் பலவும் துரிதகதியில் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

குடாநாட்டின் கட்டட புனரமைப்பு மற்றும் திருத்த வேலைகளுக்கென நூறைந்தும் ஐநூறிற்கும் அதிகமான டிராக்டர்கள் மற்றும் லொறிகள் மணல் ஏற்றும் பணியில் இப்பகுதி யில் ஈடுபட்டுள்ளன.


# பணிநிலை வேண்டுகை

ஆயப் பகுதிக்குக் கீழ்வரும் பணிநிலைக்குத் தகுதியுள்ளவர்களிடமிருந்து வேண்டுகை கோரப்படுகின்றது. ஆர்வமுடையோர் தங்களது தன்வரலாறு அடங்கிய [சுயவிபரக்] வேண்டுகைகளை 10.11.2003ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**ஆ,ய அலுவலர் (ஆண்கள் மட்டும்)**

**கல்வித் தகைமை:-** க.பொ.த.(உ/த) அல்லது க.பொ.த.(சா/த) உடன் ஈராண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-**

பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி, வருவாய்ப்பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:-** 11.11.2003 காலை 10.00 மணி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:-** வ: வருவாய்ப்பகுதிச் செயலகம்,
பழைய சாலை, கிளிநொச்சி.

குறிப்பு :- நேர்முகத்தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

(சி-8691)

# அமெரிக்காவுடன் உளவுத் தகவல் பரிமாற்றம்; ஈரானிய அரசு திட்டவட்டமாக நிராகரிப்பு!

## உறவு நிலைமையில் தொடர்ந்தும் விரிசல்

**அமெரிக்காவுடன் உளவுத் தகவல்களை பரிமாறிக்கொள்ள ஈரான் மறுப்புத் தெரிவித்துள்ளது. ஈரானின் அரச பேச்சாளர் அப்துல்லாஹ் ரமஸான் ஸாதே இந்த மறுப்பை அறிவித்துள்ளார்.**

ஈரானில் அல்-ஹைஹதா இயக்கப் போராளிகள் ! ள்ர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இவர்களை உரிய நாடுகளிடம் ஈரான் கையளித்தல் வேண்டும். அது மாத்திரமல்லாது அவர்கள் பற்றிய தகவல்களையும் ஈரான் முன் வைத்தல் வேண்டும் என வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஸ்கொட் மக்லெலன் ஈரானுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளிக்கும் விதத்திலேயே ஈரான் தகவல் பரிமாற்றத்திற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது. அமெரிக்க பாதுகாப்புத் துறையினர்களுடன் எமக்கு எதுவித தொடர்புமில்லை. இந்த நிலையில் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ள வேண்டிய அவசியமும் எமக்கில்லை என ஈரான் அரச பேச்சாளர் அப்துல்லாஹ் ரமஸான்ஸாதே குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஈரான் அதன் நடத்தையை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். அன்சாருள் இஸ்லாம், அல்-ஹைஹதா அமைப்பாளர்களுடன் அது கொண்டுள்ள தொடர்புகளை நிறுத்திக் கொள்ளல் வேண்டும். அமெரிக்க- ஈரான் உறவுகள் மேம்படுவதற்கு இவைகள் முக்கியமானதாகும் என வெள்ளை மாளிகைப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

1979ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா ஈரானுடனான தொடர்புகளைத் துண்டித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் ஈரான் மீது அமெரிக்கா தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது. இந்த வகையில் ஈரானிய அணுவாயுத விவகாரம் இன்று முக்கியமாக அமைந்துள்ளமை தெரிந்ததே.

### வேகம் தணிந்தது!

கலிபோர்னியாவில் பரவிவந்த காட்டுத் தீதற்போது சிறிது தணிந்துள்ளதெனக் கூறப்படுகிறது. 7லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கரில் பரவிய இக்காட்டுத்தீயினால் 2750 வீடுகள் எரிந்துள்ளன. தீயணைப்பு படை வீரர் ஒருவர் உட்பட 20 பேர் காட்டுத்தீயினால் பலியாகினர். சுமார் 01 லட்சம் பேர் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.



ஈராக் - பலூஜா நகரில் ஆளுநரின் விடுதிக்கு முன்னால் எரியும் காரை நோக்கி போக்குவரத்துக் கட்டுப்பாட்டு கூம்பகங்களை எறியும் ஈராக்கி யஇளைஞர்கள்.



அமெரிக்கப் படைகளை உடனடியாக ஈராக்கைவிட்டு வெளியேறக்கோரி பாகிஸ்தான் சக்குர் நகரில் நடைபெற்ற தொழுகையின்போது போலி அமெரிக்கக் கொடியை எரிக்கும் பாகிஸ்தானிய சுனி முஸ்லிம்கள்.

## நூற்றுக்கணக்கான சட்டவிரோதக் குடியேறிகள் இத்தாலியில் தரையிறக்கம்

இத்தாலியின் தென் மேற்குக் கரை பிரதேசங்களில் 24 மணி நேரத்தினுள் 500ற்கும் அதிகமான சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் 06 படகுகளில் தரையிறங்கியுள்ள தாக கடற் பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த புதன்கிழமை கூறியுள்ளார் கள்.

இத்தாலியின் பெம் பெருராதீவை முதல் நாள் இரவன்று அண்மித்த 280 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் சிறிய படகுகளில் மறுநாள் பகல் பொழுது தரையிறங்க ஆரம்பித்துள்ளதாக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இவர்கள் அனைவரும் ஆண்கள் எனவும், பலஸ்தீனம், ஈராக் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் 03 பேர் சுகயீனமுற்றதால் அவர்களை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

ஏனைய குடியேற்றவாசிகள் எங்கு, எவ்வாறு தரையிறங்கினர் என்று எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் அனைவரும் சிசிலி தீவுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர்.

ஆபிரிக்காவிலிருந்து படகொன்றில் இத்தாலிக்குச் சென்ற போது கடும் நிபந்தனைகள் காரணமாக 13 பேர் படகில் உயிரிழந்த சம்பவம் இடம் பெற்று ஒரு கிழமை முடிவடைவதற்குள் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் குடியேற்ற வாசிகள் இத்தாலியில் தரை இறங்கியிருக்கின்றனர்.

ஆனால், இந்தச் சம்பவத்தில் 50ற்கும் அதிகமானவர்கள் பலியானதாகவும், அவர்களின் சடலங்கள் கடலில் வீசப்பட்டதாகவும் உயிர் தப்பியவர்கள் கூறியுள்ளார்கள்.

நான்கு தினங்களுக்கு முன்னரும் கூட படகொன்றில் இத்தாலி செல்ல முயன்ற ஆபிரிக்கர்கள் 07 பேர் உயிரிழந்துள்ளனர்.

## அமெரிக்க பயங்கரவாதப் பட்டியலில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடம்!

அமெரிக்கா அதன் பயங்கரவாத பட்டியலில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியையும் சேர்த்துள்ளது.

இக் கட்சி பயங்கரவாதத்துடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதால் அமெரிக்காவில் அக்கட்சிக்குள்ள சொத்துக்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளனவென கூறப்பட்டுள்ளது.

காலம் சென்ற சீனத்தலைவரின் போதனைகளைப் பின்பற்றி வரும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி 1996 ஆம் ஆண்டு தொடக்கம் நேபாள மன்னர் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடி வருகிறது. தொடர்ந்து மன்னர் ஆட்சியை கம்யூனிஸ்ட் குடியரசு ஆட்சியாக மாற்றுவதற்காக நடத்தப்படுகின்ற இப் போராட்டத்தில் இதுவரை 7800 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேபாள அரசிற்கு ஆதரவு வழங்கி வரும் அமெரிக்கா, நேபாள இராணுவத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ உதவியையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சி.ஐ.ஏ. பணிப்பாளர் டெனட் மீது செனட் புலனாய்வுக்குழு விசாரணை

(வாஷிங்டன்)

யுத்தத்திற்கு முன்னர் ஈராக் தொடர்பாக பிழையான தகவல்கள் வழங்கியமை பற்றி அமெரிக்கசெனட் புலனாய்வுக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்நிலையில், அமெரிக்க மத்திய உளவுப்பிரிவுப் பணிப்பாளர் ஜோர்ஜ் டெனட்டிற்கு இந்தக்குழு அழைப்பாணை விடுத்துள்ளது.

புலனாய்வுக் குழுவினர் கோரிய சில விளக்கங்களுக்கு அமெரிக்க மத்திய புலன் விசாரணைப் பிரிவு ஒழுங்கான பதிலை இதுவரை அளிக்காத நிலையைத் தொடர்ந்தே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.



முன்னாள் இஸ்லாமிய ஜீகாத் குழுத் தலைவரான பாத்தி-அல்-ஹீகா கி இஸ்ரேலியப் புலனாய்வாளரால் கொல்லப்பட்ட 8ஆம் ஆண்டு நினைவுநாள் கூட்டத்தில் வடகாஸா பகுதியில் புனித குர்ஆன் நூல் சகிதம் கலந்துகொள்ளும் அவரின் ஆதரவாளர்.

## காஷ்மீர் விவகாரத்திற்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் பேச்சுக்கு முன்வருக!

### இந்தியாவிற்கு அழைப்பு

(இஸ்லாமாபாத்)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்தியா முன் வரவேண்டுமென பாகிஸ்தான் கூறியுள்ளது.

குறிப்பாக சர்ச்சைக்குட்பட்ட காஷ்மீர் விவகாரம் தொடர்பாக நிரந்தரத் தீர்வு காணக்கூடிய வகையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென மேலும் கூறியுள்ளது. அத்துடன் இரண்டு நாடுகளுக்குமிடையே புரிந்துணர்வுடன் கூடிய நம்பகத் தன்மையை கட்டியெழுப்புவதற்காக பாகிஸ்தான் தயாராக இருப்பதாக அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். எவ்வாறாயினும் பேச்சு வார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதே தற்போதைய முக்கிய தேவையென அவர் மேலும் கூறியுள்ளார்.

இதே வேளை காஷ்மீர் மாநிலத்தில் இடம் பெற்று வரும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் முடிவிற்கு கொண்டு வந்தால் மட்டுமே பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகுமென இந்தியா கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்க சிறுவர்களுக்கு ஜேர்மனியில் அதிக பாதுகாப்பு

ஜேர்மன் தலைநகரான பேர்ளினில உள்ள அமெரிக்க சிறுவர்கள் தொடர்பாக தொலைபேசி அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு அமெரிக்க சிறுவர்களின் பராமரிப்பு நிலையங்கள், அவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் ஆகியனவற்றிற்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க சிறுவர்கள் கல்வி கற்கும்கலை பாடசாலைகளுக்கும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு தூதரகம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.



யப்பானுக்கு எதிராகசீனாவின் சயான் நகரில் இரண்டாவது நாளாகவும் தொடர்ந்த ஆர்ப்பாட்டத்தின் போது நேற்று முன்தினம் அந்நாட்டு தேசியக் கொடியை எரித்து ஆர்ப்பாட்டம் செய்யும் சீன பல்கலைக்கழக மாணவர்கள்.

## ஊழல் எதிர்ப்பு உடன்பாடு ஐ.நா.சபையில் அங்கீகரிப்பு

ஒரு நாட்டிலிருந்து திருடப்பட்ட சொத்துக்களை மீண்டும் அந் நாட்டிற்கு வழங்க வேண்டுமென்ற உலகின் முதலாவது ஊழல் எதிர்ப்பு உடன்படிக்கையை ஐ.நா.சபை அங்கீகரித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக தயாரிக்கப்பட்டு வந்த இந்த உடன்படிக்கையை 30 நாடுகளின் அரசாங்கங்கள் உறுதிப்படுத்தி 90 நாட்களின் பின்னர் அமுலாக்கவுள்ளது. 191 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா.சபையில் உரையாற்றிய கோபி அனான் ஊழல் வறிய நாடுகளைப் பாதித்து வருகின்றதென கூறியுள்ளார்.

# ஈராக்கின் புனரமைப்பும்.....

"ஈராக் போர் முடிந்துவிட்டது; ஈராக்கில் அமைதி நிலவுகின்றது; அமெரிக்க,பிரிட்டிஷ் கூட்டுப் படைகள் ஈராக்கைக் கட்டுப்பாட்டிற் குள் வைத்திருக்கின்றன" என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் இதுவரை காலமும் கூறிவந்த உண்மைக்கு மாறான நிலைகள் தற்போது தகர்ந்து போயுள்ளன. அமெரிக்க சனாதிபதியே ஈராக்கின் நிலைமை கவலை யளிப்பதாக மிக அண்மையில் கூறியிருப்பது, ஈராக்கின் எதிர்த்தாக்குதலால் அமெரிக்கா மிகவும் திண்டாட்டத்துடனான திணறலுக் குள்ளாகியிருப்பதை உணர்த்தத் தவற வில்லை.

அதேநேரம் ஈராக்கில் தொடரும் கொரில் லாத் தாக்குதல்களுக்கு மத்தியில் ஈராக்கின் புனர்நிர்மாணப் பணிகளை அமெரிக்கா எப்படி முன்னெடுக்கப் போகின்றது...?

அது மட்டுமன்றி தனது அடுத்த தேர்தல் பிரச்சாரத்தை ஜோர்ஜ் புஷ் முன்னெடுத் துள்ளார். இந்த வேளையில் பாக்தாத்தில் செஞ்சிலுவைச் சங்கம் அருகிலான தாக்கு தலும் உயிரிழப்புக்களும் அவரது தேர்தல் பிரச்சாரத்தைப் பின்னடையச் செய்துள்ளன.

அத்துடன் நாளுக்குநாள் அதிகரிக்கும் இந்தத் தாக்குதல்களால் அமெரிக்க சனாதிபதி மிகுந்த விமர்சனத்திற்கு உள்ளாகி யுள்ளார். முக்கியமாக அவரது நாட்டிலேயே அவருக்குச் செல்வாக்கு மிகவும் கீழ் மட்டத்திற்குச் சென்றுள்ளது.

அமெரிக்க சனாதிபதிகள் சர்ச்சை களுக்குள் மாட்டிக்கொள்வது வழமையே அந்த வகையில்தான் ஜோர்ஜ் புஷ்சும் 2000 ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்காக முறை கேடுகளைக் கையாண்டார் எனும் சர்ச்சை ஆரம்ப காலங்களில் நிலவியது. அது மறைந்து போனபோது புஷ் மீதான மக்களின் செல்வாக்குச் சரிவதற்கான சாத்தியக்கூறுகளும் இல்லாது போய்விட்டன.

அதனால்தான் ஈராக் மீதான போருக்கு அமெரிக்க மக்கள் ஆதரவு நல்கினர். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல ஈராக்கை விட்டுப் படையினர் வெளியேறாமையும், அங்கு படை யினரின் மரணங்களும் மக்கள் மத்தியில் புஷ்ஷின் செல்வாக்கைத் தற் போது சரிய வைத்துள்ளது.

அதுமட்டுமன்றி 2003 சனவரியில் காங்கிரஷ் சபையில் உரையாற்றிய சனாதிபதி புஷ், ஈராக் யுரேனியத்தை நைகரில் இருந்தே பெற்றுக்கொண்டதாகக் கூறினார். அதற்குப் புலனாய்வுத் தகவல்கள் சான்று பகர்வதாகவும் கூறிக்கொண்டார்.

இவருடைய இந்த உரைக்கு அமெரிக்க துணை சனாதிபதி டிக்செனியும் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் பீல்ட் போன்றவர்களும் ஆதரவு நல்கினர். ஈராக் போர் தொடரப் பட்டது.

ஆனால் ஈராக் தனது அணுவாயுத தயாரிப்பிற்கு நைகரில் இருந்து யுரேனி யத்தைப் பெற்றதா.... எனும் வினா எழுந்த வேளை,

புலனாய்வுப் பிரிவினரால் நைகருக்கு அனுப்பப்பட்ட புலனாய்வு அதிகாரி ஜோசப் வில்சனின் அறிக்கையே இதற்குச் சான்று என புஷ்ஷின் நிர்வாகத்தினர் அப்போதைய வினாவிற்குப் பதிலளித்துவிட்டனர்.

ஆனால் ஜோசப் வில்சனோ நைகரிலிருந்து யுரேனியத்தை ஈராக் பெற்றதற்கான சான்றுகள் எதுவுமே இல்லை. சனாதிபதி உட்பட அனை வருமே தனது அறிக்கையைப் பூதகரமாக்கி, ஈராக் மீது போர் தொடுத்துவிட்டனர்; புல னாய்வு அதிகாரிகளின் பெயர்களை வெளியிடுவது

அ.கலைவாணி

சட்டப்படி குற்றமென்றும் பத்தி ரிகைப் பேட்டியில் போர்க் கணை தொடுத் திருந்தார்.

அதுமட்டுமன்றிப் புலனாய்வுத் தகவல்களை அரசியல் நோக்கத்திற்காகப் புஷ் நிர்வாகம் பயன்படுத்தியமை அடுத்த சட்ட ரீதியான குற்றமாகும் என்று அமெரிக்காவின் ஈராக் மீதான போரைச் சாடியிருந்தார்.

அமெரிக்காவில் 1982 ஆம் ஆண்டு ஒரு புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது. புலனாய்வு அதிகாரிகளின் பெயர்களை அரசியல் நோக்கங்களிற்காக வெளியிடுவது தடை செய்யப்பட்டதுடன், அவ்வாறு வெளியிடு பவர்களுக்குப் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்படுமென்று அச்சட்டம் கூறியது.

ஆனால் சனாதிபதி புஷ் உட்பட அனை வரும் ஜோசப் வில்சனின் பெயரைத் தமது நிர்வாகம் வெளிவிடவே இல்லையென்று சாதித்தனர். என்றாலும் ஜோசப் வில்சனின் பெயரை வெளியிட்டவர் சனாதிபதி புஷ்ஷின் நெருங்கிய ஆலோசகரான கார்ல்ரோவ் என்பவரே என அண்மையில் உண்மைகள் வெளிப்பட ஆரம்பித் துள்ளன.



தத்தளிப்பில் புஷ்

# அமெரிக்கத் தேர்தலும்.....

புலனாய்வுப் பணி களில் ஈடுபடுபவர்களின் பெயர்களை வெளியி டுவது தேசத் துரோகக் குற்றமாகும் என்று வலியுறுத்தியவர் தற் போதைய புஷ்ஷின் தந்தையார் என்பதை விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதனால்தான் அமெரிக்க சனாதிபதியின் நிர்வாகம் பலவாறான சிக்கல்களில் மாட்டியுள்ளதாக எதிர்பார்க்க முடிகின்றது.

பல மாதங்களாக சந்தர்ப்பம் பார்த்திருந்த சனநாயகக் கட்சியினர் இந்த ஜோசப்வில் சனின் விவகாரத்தைக் கையிலெடுத் துள்ளனர்.

இதனால்தான் அமெரிக்க சனாதிபதி விழிபிதுங்கும் நிலையில் உள்ளார் என்று கூற முடிகின்றது.

இருந்த போதும் அரசியல் ரீதியாக ஜோர்ஜ் புஷ் வெற்றிகளையும் சந்தித் துள்ளார் என்பதற்கு ஸ்பெயின் தலைநகரில் நடைபெற்ற ஈராக்கின் மீள்கட்டமைப்பிற்கான நிதி திரட்டுதலும், ஐ.நா.சபையில் இந்த நிதி,படைகள் திரட்டும் தீர்மானம் நிறை வேறியிருப்பதும் சான்றுகளாக அமை கின்றன.

ஆரம்பத்தில் சர்வதேச சமூகத்திடமிருந்து அமெரிக்காவின் நிதி,படைகள் திரட்டும் தீர் மானத்திற்கு ஐ.நா.சபை செயலர் கொபி அனான் உட்பட பிரான்ஸ்,ஜேர்மனி,ரஷ்யா போன்ற நாடுகளின் தலைவர்களும் கடும் எதிர்ப்புத்தான் தெரிவித்தார்கள்.





ஈராக்கில் கொரில்லாத் தாக்குதல்கள்.

இதனையடுத்து ஜோர்ஜ் புஷ் ஜப்பான், சிங்கப்பூர்,தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் என்ற பெயரில் நிதி வழங்கும் தீர்மானத்திற்கு ஆதரவும், படைகளை அனுப்புவதற்கான ஆதரவினையும் அந்நாடுகளின் வாசலுக்கே சென்று மண்டி யிட்டாரெனலாம்.

அதேபோல் ஐ.நா.சபையில் உறுப்பு நாடுகளான ரஷ்யா, சீனா, ஜேர்மனி,பிரான்ஸ் போன்ற நாடுகளின் சனாதிபதிகளிடமும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் மண்டியிட்டாரெனலாம்.

இந்த மண்டியிடுதலால்தான் ஐ.நா.சபை யில் அமெரிக்கா தான் நினைத்தமாதிரியே தீர் மானத்தை நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய தாக அமைந்தது.

அதேநேரம் ஈராக்கின் மீள் கட்டமைப்பிற்கு ஐரோப்பிய ஒன்றியத் தினூடாக மட்டுமே பிரான்ஸ்,ஜேர்மனி உதவி வழங்க முன்வந் தன. தனித்தனியே நிதி வழங்க மறுத்து விட்டன.

இந்த வகையில் ஈராக்கின் புனரமைப்பிற்கு அமெரிக்கா தனது பங்களிப்பாக 20 பில்லிய னையும் ஏனைய சர்வதேச நாடுகள் பதின் மூன்று பில்லியனையும் வழங்குவதற்கு உடன் பட்டுள்ளன. அதேவேளை சிங்கப்பூர் தனது படைகளை ஈராக்கிற்கு அனுப்பவும் முன்வந் துள்ளது.

எனினும் ஈராக்கின் முழுமையான புனர மைப்பு என்பதற்கு 55 பில்லியன் தேவைப்படும் என அமெரிக்க கட்டுமான நிபுணர்கள் கூறு கின்றனர்.

அதேநேரம் அமெரிக்கா தான் வழங்கவுள்ள 20 பில்லியன் நிதியினை ஈராக்கின் எண்ணெய் வளத்தைக்கொண்டே நிரப்பவுள்ளது. அதுமட்டுமன்றி மொத்தத் தொகையில் துண்டுவிழும் 17 பில்லியனுக்கும் ஈராக் எண் ணெய் வளம்தான் உதவப் போகின்றது என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகமொத்தம் அமெரிக்கா தனது பங்களிப் பாக ஒரு டொலர் தானும் செலவிடப் போவதில்லை. ஈராக்கின் புனரமைப்புச் செலவுகள் அனைத்தும் ஈராக்கின் எண்ணெய் வளத்தின் மீதும், சர்வதேச சமூகத்தின் மீதும்தான் சுமத்தப் படப் போகின்றது.

முன்பு ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுத்த அமெரிக்கா அதன் மீள் கட்டமைப் புக்கான நிதியினைச் சர்வதேச சமூகங் களிடமே சேகரித்துக்கொண்டது.

தற்போதும் ஈராக் போரையடுத்தும் அதற் கான மீள் கட்டமைப்புப் பணிகளில் சர்வ தேச சமூகம் தான் பங்காற்ற உடன்பட் டுள்ளன.

எனவே நாளை ஈராக்கின் புனரமைப்புப் பூர்த்தியாகும் போது அமெரிக்கா, ஈரான், சிரியா,வடகொரியா போன்ற நாடுகளில் ஒன்றைத் தாக்க முனையும்.....?

ஏனெனில் தாக்குதல் நடத்துவது மட்டும்தான் அமெரிக்கா புனரமைப்பு என்பது சர்வதேச ஒத்துழைப்புடன்தான் தொடர்புடை யது என்று அமெரிக்காவுக்கு நன்றாகப் புரிந்த பாடம் அது.

ஏனெனில், ஆரம்பத்தில் ஈராக் விடயத்தில் அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்த ஐ.நா.சபை உட்படப் பல நாடுகளும் இறுதி யில், அமெரிக்காவின் சொல்லிற்குச் செவி மடுக்கின்றன. என்றால் நாளையும் இதே நிலைதான் தொடரும் என்பதில் ஐயப்பாடு இருக்கப்போவதில்லைப் போலுள்ளது.

ஐ.நா.சபையும் சர்வதேச சமூகமும் அமெரிக்காவின் தாக்குதல்களை எதிர்ப்ப தோடு மட்டுமே நின்றுவிடுகின்றன. அடுத்த கட்டமாகப் புனரமைப்பில் இணைந்து கொள்கின்றன என்றால், அமெரிக்கா ஒரு போதும் தனது முன்னெடுப்புக்களைக் குறைத் துக்கொள்ளும் சாத்தியமே இருக்கப் போவதில்லை எனலாம்.

அதேநேரம் ஈராக்கில் தொடரும் தாக்குதல்களை நோக்கும் போது, அமெ ரிக்கா எப்படி ஈராக்கின் புனரமைப்புக்களைச் செய்து முடிக்கப்போகின்றது எனும் வினா எழாமல் இல்லை.

ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் என அண்மையில் பின்லேடன் மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படு கின்றது.

இது எத்தகைய தாக்கங்களை அமெ ரிக்கா வுக்கு ஏற்படுத்தப் போகின்றது என்பது அடுத்த வினாவாகும்.

இவையனைத்தும் அமெரிக்க சனாதி பதிக்கு வெளியிலிருந்து ஏற்படும் சிக்கல்கள் என்றால் அவருக்கு உள்நாட்டிலும் மிகப் பெரிய சிக்கல்கள் உருவாகிவிட்டன.

ஜோசப் வில்சனின் சிக்கல்கள் ஒரு புறம், ''பில்கிளிண்டன் பொய் கூறினார், அமெரிக்கர்கள் எவரும் அதனால் கொல்லப் படவில்லை. புஷ் பொய் கூறினார், அமெரிக் கர்கள் ஈராக்கில் உயிர் இழந்துகொண்டி ருக்கிறார்கள்'' எனும் அமெரிக்க சனாதிபதிக்கு எதிரான போராட்டங்கள் மறு புறம்.

அத்துடன் அமெரிக்க சனாதிபதியின் அரசியல்,பொய்கள்,நடவடிக்கைகள் என்பன பற்றிய புத்தகங்கள் அமெரிக்காவில் வெளியாகி அதிகளவில் விற்பனை யாகின்றன. "அமெரிக்காவின் துப்பாக்கிக் கலாச்சாரம்" என்பது பற்றிக் கூறும் ஒரு புத்தகம். "பயங்கர வாதத்திற்கெதிரான யுத்தமும் அதனால் சீரழிந்து போயுள்ள சிவில் உரிமைகள்" என்பது பற்றிக் கூறுவது மற்றொரு புத்தகம்.

இதனால் அடுத்த தேர்தலில் அமெரிக்க சனாதிபதி புஷ் தோற்பது உறுதி என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம் ஈராக்கில் தாக்குதல்கள் உக்கிரமடைந்துள்ளதாகக் கூறி நிவாரண உதவிகள் வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியேறத் தொடங் கியுள்ளன.

எனவே அமெரிக்கா ஈராக்கின் அமைதியை எப்படி ஏற்படுத்தப் போகின் றது....? புனரமைப்புக்களை எப்படிக் கையாளப் போகின்றது...?.

□ □ □ □ □

# இடைக்கால தன்னாட்சி அதிகார சபை புலிகள் முன்வைத்துள்ள ஆலோசனைகள்

**இலங்கைத் தீவின் வடக்குக்கிழக்கில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை நிறுவுவதற்கான ஓர் உடன்படிக்கைக்கு தமிழ் மக்கள் சார்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைக்கும் ஆலோசனை .**

சட்டத்தின் ஆட்சிக்கான கோட்பாடுகள், மனித உரிமைகள்,

அனைத்து நபர்களதும் சமத்துவம் மற்றும் மக்களது சுயநிர்ணய உரிமைக்கு அமைவாகவும்,

இலங்கைத் தீவின் அனைத்து நபர்களுக்கும் நிலையான அமைதியைக் கொண்டுவருவதற்கு உறுதிபூண்டும்,

இத்தீவில் அமைதியைக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு நோர்வே அரசும் நோர்வே மக்களும் சர்வதேச சமூகமும் ஆற்றும் சேவைகளைப் பாராட்டி ஏற்றுக்கொண்டு,

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான சமாதான நடவடிக்கைகள் சவால்கள் நிறைந்த வரலாறாக அமைந்திருந்தாலும், அமைதி வழியிலான தீர்விற்கு உண்மையான வாய்ப்பு இருப்பதை இனம்கண்டு, இறுதித் தீர்வை அடைவதற்கான செயல்முறை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க, சட்டங்களையும் கொள்கைகளையும் வகுத்து, வடக்குக்கிழக்கிலே மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகள் அனைத்தையும் செயற்றிறனுடன் விரைவாக நிறைவேற்றுவதன் மூலம் வடக்குக் கிழக்கு மக்களது உடனடித்தேவைகளை வழங்குவதற்காக வடக்குக்கிழக்குப் பிராந்தியத்திற்கு ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை நிறுவுவதற்கு உறுதிபூண்டு,

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய வரலாறு, வாக்குறுதிகளை மீறிய ஒரு செயல்முறையாக இருந்தமையையும் இலங்கை அரசாங்கத்திற்கும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்களது பிரதிநிதிகளுக்கும் இடையே காத்திரமாகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அடுத்தடுத்துப் பதவிக்குவந்த இலங்கை அரசாங்கங்களால் ஒருதலைப்பட்சமாக, மதிக்கப்படாது முடிவிற்குக் கொண்டுவந்தமையையும் கவனத்திலெடுத்து,

அடுத்தடுத்துப் பதவிக்குவந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட இனரீதியான துன்புறுத்தல், பாரபட்சம், அரச வன்முறை மற்றும் அரசுகள் பின்னிருந்து நடாத்திய வன்முறை ஆகியனவற்றை மனதில் நிறுத்தியும்,

1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஒரு சுதந்திர, இறைமையுள்ள, மதசார்பற்ற அரசை அமைக்குமாறு தமிழ் மக்கள் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தமது பிரதிநிதிளுக்கு ஆணை வழங்கியிருந்தமையைக் கவனத்திலெடுத்தும்,

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக, வன்முறையின்றி அமைதி வழியில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு வரையறைக்குள் அமைந்த போராட்டம் பயனற்றதென நிரூபிக்கப்பட்டு, முரண்பாட்டை அமைதிவழியில் தீர்ப்பதற்கான மார்க்கங்கள் இல்லாது போனபின்னர்தான், ஒரு தற்காப்பு நடவடிக்கையாகவும் தமிழரது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவுமே தமிழரது ஆயுதப்போராட்டம் தொடங்கியது என்பதை மனதில் நிறுத்தியும்,

முதலில் டிசம்பர் 2000இலும் பின்னர் டிசம்பர் 2001இலும் ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, நெடுஞ்சாலைகளைத் திறந்து, வர்த்தகத்திற்கும் மக்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கும் அனுசரணை வழங்கி, இயல்பு நிலை திரும்புவதற்கான ஒரு உகந்த சூழலையும் முரண்பாட்டிற்கு ஒரு நீதியான தீர்வையும் காணும் நம்பிக்கையோடு சமாதானப் பேச்சுக்களுக்குள் நேர்மையாக இறங்கி, சமாதானம் நோக்கிய நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப்புலிகளே முதலில் முன்னெடுத்தார்கள் என்பதை மீளநினைவுபடுத்தியும்,

2001 போர்நிறுத்த அறிவிப்பிற்கு மதிப்பளித்து தற்போதைய இலங்கை அரசாங்கம் தானும் ஓர் போர்நிறுத்தத்தை அறிவித்ததிலுள்ள அரசியல் துணிவைக் கவனத்திற்கொண்டு,

இலங்கைத் தீவிலுள்ள வடக்குக்கிழக்குப் பகுதியின் சமூக, பொருளாதார, நிர்வாக மற்றும் பௌதீகக் கட்டுமானங்களுக்கு அழிவை விளைவித்தபோர், வடக்குக் கிழக்கிற்கே பிரதானமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்ததோடு, வடக்குக்கிழக்கே இலங்கைத் தீவில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தொடர்ந்தும் இருக்கிறது என்பதையும் உணர்ந்து,

2000ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், வடக்குக்கிழக்கிலுள்ள பெரும்பான்மையான தமிழ் மக்கள் தமது செயல்கள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தங்கள் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் என ஏற்றுக்கொண்டே தங்கள் வாக்கை வழங்கினார்கள் என்பதை இனம்கண்டு,

இலங்கைத் தீவிலுள்ள வடக்குக்கிழக்கின் பெரும்பான்மையான பகுதி மீது தமிழீழ விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டையும் நியாயாதிக்கத்தையும் செயற்றிறன்வாய்ந்த முறையில் செயற்படுத்துகின்றமையைக் கருத்திற்கொண்டு,

பேச்சுவார்த்தை மூலமான ஒரு இறுதித் தீர்வை அடைவதும் அதனை அமுல்படுத்துவதும் ஒரு நீண்ட காலமெடுக்கும் கருமமாக அமையலாம் என்பதை உணர்ந்து,

அனைத்து அகதிகளும் இடம்பெயர்ந்த நபர்களும் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் திரும்பிச் செல்வதற்கான அவசியத்தையும், அவர்கள் வடக்குக் கிழக்கிலுள்ள தங்கள் வீடுகளுக்குத் தங்குதடையின்றிச் சென்று, தரையிலும் கடலிலும் தமது வாழ்வாதாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அவர்களது உடனடித் தேவையையும் வலியுறுத்தி,

இலங்கை அரச நிறுவனங்களும் அவை வழங்குகின்ற சேவைகளும் வடக்குக்கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானவையல்ல என உணரப்பட்டுள்ளமையை மனதிற்கொண்டு,

அமைதிப் பேச்சுக்களின் போது அமைக்கப்பட்ட அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவும் (சிரான்) ஏனைய உபகுழுக்களும் தோல்வியுற்றமையையும், மீண்டும்மீண்டும் செயலற்ற நிலைக்கு இட்டுச்சென்ற இந்த உபகுழுக்களது அமைப்புமுறையே அந்தத் தோல்விக்குக் காரணம் என்பதையும் இனங்கண்டு,

இலங்கை அரசாங்கம் தனது 2000ஆம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவாறு, ஓர் இடைக்கால அதிகாரசபைக்கான தேவையை அங்கீகரித்துள்ளமைக்கு மதிப்பளித்து,

சட்டம், ஒழுங்கைப் பேணுவது ஒரு நீதியானதும் சுயாதீனமுமான சமூகத்திற்கு இன்றியமையாத அம்சம் என்பதை உணர்ந்து,

போரினால் சிதைக்கப்பட்ட வடக்குக்கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான உடனடித்தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் எந்தவொரு ஆட்சியியல் செயற்பாட்டை அங்கு மேற்கொள்வதற்கும் வருமானம் ஈட்டவேண்டியது தேவை என்பதை இனம்கண்டு,

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பனவற்றிற்கு, நிலத்தின் மீதான கட்டுப்பாடு முக்கியம் என்பதை இனம்கண்டு ,

1972ஆம் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புக்களது உருவாக்கத்தில் தமிழ் மக்கள் பங்குபற்றவில்லை என்பதையும் அவை பாகுபாடான ஆட்சியியலை நிறுவனமயப்படுத்தி, தீர்மானம் எடுக்கும் செயல்முறையில் காத்திரமான பங்கினைத் தமிழ்மக்களுக்கு வழங்க மறுத்தமையும் மனதிற்கொண்டு,

கடந்த தசாப்தத்தில் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தீர்க்க புதுமையானதும் பரந்த சிந்தனையுடனுமான நடைமுறைகளூடே சமத்துவத்தின் அடிப்படையில் முரண்பட்ட தரப்புக்களுக்கிடையே உடன்படிக்கையினை ஏற்படுத்துவதன் மூலமாக சர்வதேச மட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கத்தைக் கவனத்திற்கொண்டு,

போரிடும் தரப்புக்களுக்கிடையே சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தோடு எட்டப்படும் ஒப்பந்தங்களில் அல்லது உடன்படிக்கைகளில் மாத்திரமிருந்தே பெறப்படும் சட்டரீதியான பலத்தைக்கொண்டு போரினால் சிதைந்த நாடுகளில் இடைக்கால அரசாங்க ஒழுங்குகளை நிறுவுவதற்கான முன்னுதாரணங்களில் நம்பிக்கைகொண்டும்,

இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் (SLMM) பணியை உள்ளடக்கிய போர்நிறுத்த ஒப்பந்தம், SIHRN மற்றும் வடக்குக்கிழக்கு மீள்கட்டுமான நிதியம் (NERF) அமைக்கப்பட்டமை போன்ற நடைமுறைகள் இத்தகைய ஒழுங்குகளை ஏற்படுத்துவதற்குரிய பெறுமதியான முன்னுதாரணங்களாக அமைகின்றன என்பதைக் கவனத்திற்கொண்டு,

மேலே கூறப்பட்டனவற்றின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட தரப்புக்களான தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் கீழ்வரும் ஏற்பாடுகளுக்கு இத்தால் இணங்குகின்றன:

## 1. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை

பேச்சுவார்த்தை மூலமான இறுதித்தீர்வு எட்டப்பட்டு அமுல்படுத்தப்படும் வரை, வடக்குக்கிழக்கிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை (Interim Self-Governing Authority-ISGA) நிறுவப்படும்.

ISGAஇல் முஸ்லீம் சமூகத்தினது பங்கை உருவாக்கம் செய்வதில் கலந்துகொள்வதற்கு அவர்களது பிரதிநிதிகளுக்கு உரிமை உண்டு.

## 2. ISGAஇன் அங்கத்துவ அமைப்பு

2.1. இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்படுகின்ற தரப்புக்களால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களை ISGA கொண்டிருக்கும்.

2.2. ISGAஇன் அங்கத்துவ அமைப்பு கீழ்வருமாறு அமையும்:

2.2.a. தமிழீழ விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்

2.2.b. இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள், மற்றும்

2.2.c. வடக்குக்கிழக்கிலுள்ள முஸ்லீம் சமூகத்தால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்

2.3. கீழ்வருவனவற்றை உறுதிசெய்யக்கூடிய விதத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்:

2.3.a. ISGAஇல் தமிழீழ விடுதலைப்புலிகளின் நியமனதாரிகளே அறுதிப் பெரும்பான்மையினராக இருப்பர்.

2.3.b. மேலுள்ள உபவிதி (a)இற்கு பங்கம் ஏற்படாத வகையில் வடக்குக்கிழக்கிலுள்ள முஸ்லீம் மற்றும் சிங்கள சமூகங்கள் ISGAஇல் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும்.

2.4. தலைவர் (Chairperson) ISGAஇலுள்ள பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு ISGAஇன் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படுவார்.

2.5. வடக்குக்கிழக்கிற்கான பிரதான செயலாட்சியரையும் அவரது கடமைகளை ஆற்றுவதில் உதவுவதற்கு தேவைப்படக்கூடிய ஏனைய அதிகாரிகளையும் தலைவர் நியமிப்பார். இந்த நியமனம் ஏதேனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக்கொண்டு வருவதற்கான அதிகாரங்களையும் தலைவர் கொண்டிருப்பார்.

## 3. தேர்தல்கள்

சரத்துக்கள் 2.2 மற்றும் 2.3இன் ஏற்பாடுகள், ISGAஇற்கான தேர்தல்கள் நடாத்தப்படும் வரை தொடரும். இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஐந்தாண்டின் முடிவில் இறுதித் தீர்வு எதுவும் எட்டப்படாமலும் அமுல்படுத்தப்படாமலும்விட்டால், இந்த ஐந்தாண்டு காலப்பகுதி முடிவடைகையில் தேர்தல்கள் நடாத்தப்படும். ISGAஆல் நியமிக்கப்படும் ஒரு சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு, சுதந்திரமானதும் நேரடியானதுமான தேர்தல்களை சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் சர்வதேச ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக நடாத்தும்.

## 4. மனித உரிமைகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளவாறு அனைத்து உரிமைகளும் வடக்குக்கிழக்கிலுள்ள மக்களுக்கு வழங்கப்படும். ISGA இயற்றும் சட்டம், ஒழுங்குமுறை, தீர்ப்பு,கட்டளை, தீர்மானம் எல்லாம் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கென சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். ISGA ஆல் நியமிக்கப்படும் ஓர் சுயாதீனமான ஆணைக்குழு இந்த

மனித உரிமைகளுக்கான கடப்பாடுகள் எல்லாம் பேணப்படுவதை உறுதிசெய்யும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒரு காத்திரமான ஒழுங்கமைப்பை நிறுவுவதற்கு இந்த ஆணைக்குழு சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் உதவியை நாடும். இந்த ஆணைக்குழு எந்தவொரு தனிநபரிடமிருந்தும் முறைப்பாடுகளை ஏற்று விசாரணை செய்து, பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் வழங்கவேண்டிய நட்டஈட்டைப் பரிந்துரைத்து, அந்த நபரின் உரிமைகள் மீளநிலை நிறுத்தப்படுவதை உறுதிசெய்யும்.

**5. மதச்சார்பின்மை**

வடக்குக்கிழக்கில் எந்தவொரு மதத்திற்கும் விசேட இடம் வழங்கப்படமாட்டாது.

**6. பாகுபாட்டிற்கெதிரான தடை**

வடக்குக்கிழக்கில் மதம், இனம், சாதி, தேசியம் அல்லது பிராந்தியம், வயது அல்லது ஆண், பெண் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாதிருப்பதை ISGA உறுதிசெய்யும்.

**7. இலஞ்ச ஊழலைத் தடுத்தல்**

ISGA தனது நிர்வாகத்தில் அல்லது தனது நிர்வாகத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் எதுவும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யும்.

**8. அனைத்து சமூகங்களினதும் பாதுகாப்பு**

கலாச்சாரம் அல்லது மதம் தொடர்பாக, ஒரு சமூகத்திற்கு வழங்காத தனிச்சலுகைகளை அல்லது அவர்கள் மீது திணிக்காத அசௌகரியங்களை இன்னொரு சமூகத்திற்கு வழங்கும் அல்லது திணிக்கும் சட்டம், ஒழுங்குமுறை, விதி, கட்டளை அல்லது தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது.

**9. ISGAஇன் நியாயாதிக்கம்**

9.1. மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தற்போதுள்ள சேவைகளையும் வசதிகளையும் மேம்படுத்தி உயர்த்துதல் உள்ளடங்கலான அபிவிருத்தி (இதன் பின்னால் RRRD எனக் குறிப்பிடபபடுகின்றது), வரி விதித்தல் உள்ளடங்கலான வருவாய் ஈட்டல், வருமானம், தீர்வையும் சுங்கவரியும், சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணி தொடர்பான அதிகாரங்கள் உள்ளடங்கலாக வடக்குக்கிழக்கை ஆளுகை செய்வதற்கு வேண்டிய அனைத்து அதிகாரங்களையும் ISGA கொண்டிருக்கும்.

இந்த அதிகாரங்களுக்குள், வடக்குக்கிழக்கிலும் வடக்குக்கிழக்கிற்காகவும் பிராந்திய நிர்வாகம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் அனைத்து அதிகாரங்களும் செயற்பாடுகளும் உள்ளடங்கும்.

9.2. இவ்வாறான அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குமான விரிவான வழிமுறைகள் இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்களால் மேலும் பேசி முடிவெடுக்கப்படும்.

**10. அதிகாரங்களை வகைபிரித்தல்**

வடக்குக்கிழக்கில் நீதியை நிர்வகிப்பதற்கான தனியான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு, அந்த அமைப்புக்களுக்கு நீதி அதிகாரங்கள் உரித்தாக்கப்படும். நீதிபதிகளது சுயாதீனத்தை உறுதிசெய்வதற்கு ISGA பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் சரத்து 4 (மனித உரிமைகள்) மற்றும் 22இற்கு (பிணக்குத் தீர்த்தல்) பங்கம் ஏற்படாத வாறு, இந்த சரத்தின் கீழ் உருவாக்கப்படும் அமைப்புக்களே, இந்த உடன்படிக்கையை அர்த்தப்படுத்தி அமுல்படுத்துவதில் எழும் அனைத்துப் பிணக்குகளையும், இந்த உடன்படிக்கையில் அல்லது இந்த உடன்படிக்கையின் கீழ் அல்லது இந்த உடன்படிக்கையின் ஏதேனும் ஏற்பாட்டில் எழும் ஏதேனும் பிணக்குகளையும் தீர்ப்பதற்கு தனியானதும் தனித்துவமானதுமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும்.

**11. நிதி**

ISGA, ஓர் வருடாந்த வரவு-செலவு அறிக்கையைத் தயாரிக்கும்.

ISGAஆல் நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு நிதி ஆணைக்குழு அமைக்கப்படும். இந்த அங்கத்தவர்கள் நிதி, நிர்வாகம், அல்லது வாணிபம் போன்ற துறைகளில் உயர் பதவி வகித்தவர்களாகவோ அல்லது இத்துறைகளில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள் என இனம்காணப்பட்டவர்களாகவோ இருக்கவேண்டும். இலங்கை அரசாங்கத்தின் ஒன்றுதிரட்டிய நிதியத்திலிருந்து (consolidated fund) வடக்குக்கிழக்கிற்கு ஒதுக்கப்படவேண்டிய நிதியின் அளவை இந்த ஆணைக்குழு பரிந்துரைக்கும். இப்பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தனது நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

சமவிகிதத்தில் பகிர்ந்தளிப்பதற்கு உரிய கவனம் செலுத்தி, ISGA தன்வசமுள்ள நிதிகளை எப்படிப் பயன்படுத்துவதெனத் தீர்மானிக்கும். ISGA வசமுள்ள நிதிகளுள் வடக்குக்கிழக்குப் பொதுநிதியம், வடக்குக்கிழக்கு மீள்கட்டுமான நிதியம், விசேட நிதியம் ஆகியன உள்ளடங்கியிருக்கும்.

வடக்குக்கிழக்கில் அல்லது வடக்குக்கிழக்கிற்காக இலங்கை அரசு செய்யும் அனைத்துச் செலவுகளும் ISGAஇன் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்கிறது.

11.1. வடக்குக்கிழக்குப் பொதுநிதியம்

வடக்கு-கிழக்கு பொது நிதியம் ISGAஇன் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதோடு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

11.1.a. இலங்கை அரசாங்கம் ஏதேனும் குறித்த நோக்கங்களுக்காக வழங்கும் அனைத்து உதவிகளிலிருந்தும் கடன்களிலிருந்தும் கிடைக்கும் பணம் மற்றும் ISGA இற்கு வழங்கப்படும் ஏனைய பிற கடன்கள் மூலம் பெறப்படும் பணம்,

11.1.b. அரசுகளுடனோ, நிறுவனங்களுடனோ ஏனைய அமைப்புக்களுடனோ ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் வடக்குக்கிழக்கிற்கென சிறிலங்கா அரசாங்கத்தினால் குறித்தொதுக்கப்படும் நிதிகள்

11.1.c. கீழே குறிப்பிடப்படும் நிதியங்கள் தவிர்ந்த, ISGAக்கு கிடைக்கும் ஏனைய வரவுகள்.

11.2. வடக்குக்கிழக்கு மீள்கட்டுமான நிதியம்

NERF அமைப்பு, கட்டுப்பாடு ISGAஇற்கு மாற்றப்படுவது தவிர, ஏனைய அம்சங்களில் அதன் தற்போதைய வடிவத்திலேயே தொடர்ந்தும் இருக்கும்.

வடக்குக்கிழக்கு மீள்கட்டுமானத்திற்காகக் கொடுக்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளும் NERF இற்கூடாகப் பெறப்படும். NERF நிதியத்திலிருந்து பெறப்படும் வளங்களை பயன்படுத்துவது தொடர்பாக ISGA நேரடியாக முடிவுகளை எடுத்துக் கண்காணிக்கும்.

11.3. விசேட நிதியம்

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்கென்றே வரும் கடன்களும் கொடுப்பனவுகளும், NERF நிதியத்தினூடாக உள்வரமுடியாதவிடத்து, இந்த விசேட நிதியத்திற்குள் உள்வாங்கப்படும். ஏனைய நிதியங்களைப் போலவே இந்த விசேட நிதியமும் ISGAஇன் கட்டுப்பாட்டில் இருக்கும்.

**12. கடன் பெறுவதற்கும் உதவிபெறுவதற்கும் வர்த்தகத்திற்குமான அதிகாரங்கள்**

உள்ளூரிலும் வெளியூரிலும் கடன் பெறுதல், உத்தரவாதங்களையும் இழப்பீடுகளையும் வழங்குதல், நேரடியாக உதவிகளைப் பெறுதல், உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகத்தில் ஈடுபடுதல் அல்லது அதனை ஒழுங்கமைத்தல் போன்றனவற்றிற்கான அதிகாரங்களை ISGA கொண்டிருக்கும்.

**13. நிதிக் கணக்கீடும் கணக்காய்வும்**

13.1. ISGA ஓர் கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கும்.

13.2. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிதியங்களும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாகச் செயற்படுத்தப்பட்டு, பேணப்பட்டு, கணக்கீடு செய்யப்படும். இந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தால் ஆய்வுசெய்யப்படும். சர்வதேச மூலங்களிலிருந்து பெறப்படும் அனைத்து நிதிகளது கணக்காய்வும், ISGAஆல் நியமிக்கப்படும் சர்வதேசப் புகழ்பெற்ற நிறுவனத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

**14. மாவட்டக் குழுக்கள்**

14.1. தனது சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களைக் காத்திரமாகச் செயற்படுத்துகையில், மாவட்டங்களில் நிர்வாகத்தினை மேற்கொள்வதற்காக ISGA, மாவட்டக்குழுக்களை உருவாக்கி, இந்தக் குழுக்களுக்கு தான் தீர்மானிக்கின்ற அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கலாம். ISGAஇற்கும் குழுக்களுக்கும் இடையிலான ஒரு இணைப்பாளராகச் சேவையாற்றக் கூடியவாறு, ISGAஇன் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து ISGAஆல் இந்தக் குழுக்களது தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

14.2. குழுவின் ஏனைய உறுப்பினர்களும் ISGAஆல் நியமிக்கப்படுவதோடு இந்த நியமனங்கள் எதனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களையும் ISGA கொண்டிருக்கும். இந்த உறுப்பினர்களை நியமிக்கையில், அனைத்து சமூகங்களதும் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதற்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

14.3. இந்தக் குழுக்கள் ISGAஇன் கீழ் நேரடியாகச் செயற்படும்.

14.4. ISGAஇன் பிரதான செயலாட்சியாளர் மாவட்டங்களில் பிரதான நிறைவேற்று அதிகாரிகளை நியமிப்பதோடு இந்தப் பிரதான நிறைவேற்று அதிகாரிகள், குழுக்களுக்குச் செயலாளர்களாகவும் செயற்படுவார்கள். இந்த நியமனங்கள் எதனையும் இடை நிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களை பிரதான செயலாட்சியாளர் கொண்டிருப்பார்.

14.5. குழுக்களது அனைத்து நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் அந்தந்தக் குழுக்களது செயலாளர்கள் ஊடாக ஒருங்கிணைக்கப்படும்.

14.6. நிர்வாகத்திற்கு உதவியாக இருப்பதற்காக உபகுழுக்களும் நியமிக்கப்படலாம்.

**15. நிர்வாகம்**

தனது நிறைவேற்று அதிகாரங்களைச் செயற்படுத்துவதன் ஒருபகுதியாக, இந்த ஒப்பந்தத்தின் சரத்து 9இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களுடன் தொடர்புபட்ட வடக்குக்கிழக்கிலுள்ள அனைத்து நிர்வாக அமைப்புக்களும் ஆளணியும் ISGAஇன் கட்டுப்பாட்டிலும் நெறிப்படுத்தலின் கீழும் அமையும்.

ISGA தற்றுணிவுடன், தேவையான துறைகளில் நிபுணர்களது ஆலோசனைக் குழுக்களை உருவாக்கலாம். இந்த ஆலோசனைக் குழுக்கள் பொருளாதார விவகாரங்கள், நிதி விவகாரங்கள், நீதி விவகாரங்கள், மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு விவகாரங்கள், அடிப்படைக்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆகியனவற்றிற்கும் இவற்றிற்கென மட்டுப்படுத்தப்படாமல் இன்னும் தேவையான துறைகளுக்கும் அமைக்கப்படலாம்.

**16. காணி நிர்வாகம்**

சரத்து 9இல் (ISGAஇன் நியாயாதிக்கம்) குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்குக் காணி முக்கியம் என்பதால், வடக்குக் கிழக்கிலுள்ள தனியாருக்குச் சொந்தமானவை தவிர்ந்த எல்லாக் காணிகளையும் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் பொருத்தமான தேவைகளுக்குப் பயன்படுத்துவதைத் தீர்மானிப்பதற்குமான அதிகாரத்தை ISGA கொண்டிருக்கும்.

காணிகளிலிருந்து விரட்டப்பட்ட மக்களது காணிகளின் உரிமை, அத்துமீறிக் குடியேறியோர் வசிக்கும் காணிகளின் உரிமை போன்றவற்றை, காலம் எவ்வளவு கடந்திருந்தாலும் கூட, விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென காணி நிர்வாகம் தொடர்பான ஒரு விசேட ஆணைக்குழுவை ISGA நியமிக்கும்.

விசேட ஆணைக்குழு செயற்படுகின்ற காலவரையறையை ISGA தீர்மானிக்கும்.

**17. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் மீள்குடியமர்வு**

இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளால் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும் இத்தகைய காணிகளுக்கு உரித்துடைய பொதுமக்கள் தங்குதடையின்றிச் செல்வதற்கான உரிமையை மறுப்பதும் சர்வதேசச் சட்ட நியமங்களை மீறும் செயலாகும். இந்த காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டு, அவற்றின் உரிமை முன்னைய உரித்தாளர்களுக்கு மீளளிக்கப்படவேண்டும். சொந்தக்காரர்களிடமிருந்து அவர்களது காணிகளைக் கடந்த காலங்களில் பறித்துவைத்திருந்தமைக்காக, இலங்கை அரசாங்கம் அவர்களுக்குக் கட்டாயம் நட்டஈடு செலுத்த வேண்டும்.

இந்த காணிகளில் இடம்பெயர்ந்த மக்களையும் அகதிகளையும் மீளக்குடியமர்த்திப் புனர்வாழ்வு அளிப்பதற்கு ISGA பொறுப்பாக இருக்கும்.

**18. கடல் மற்றும் கரையோர வளங்கள்**

வடக்குக்கிழக்கு நிலப்பிரதேசத்தை அண்டிய கடல் மற்றும் கரையோரவளங்கள் மீது ISGA கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதோடு இந்த வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகத்தேவைப்படும் கட்டுப்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.

**19. இயற்கை வளங்கள்**

வடக்குக்கிழக்கிலுள்ள இயற்கை வளங்கள் மீது ISGA கட்டுப்பாட்டைக்கொண்டிருக்கும். அத்தகைய இயற்கை வளங்கள் தொடர்பாக ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும். அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ்வரவேண்டிய பணம் அனைத்தும் ISGAஇற்கு செலுத்தப்படுவதை இலங்கை அரசு உறுதிசெய்யும். நடைமுறையிலிருக்கும் அத்தகைய ஒப்பந்தங்களில் எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் யாவும் ISGAஇன் சம்மதத்துடனேயே செய்யப்படவேண்டும். எதிர்காலத்தில் இவற்றிற்கான ஒப்பந்தங்கள் ISGA உடன் செய்யப்படவேண்டும்.

**20. நீர்ப்பயன்பாடு**


ஆறுகளின் கீழ்ப்பகுதியில் நீர்பெறுவோருக்கு நீதியாகவும் நியாயமாகவும் சமஅளவிலும் நீர் கிடைப்பதை உறுதிசெய்யவேண்டிய கடப்பாடு ஆறுகளின் தோற்றுவாய்ப்பகுதிகளில் நீர் பெறுவோருக்கு உண்டு. இலங்கை அரசாங்கமும் ISGAஉம் நீர்வளப்பாவனையில் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இந்தக்கோட்பாடு பின்பற்றப்படுவதை உறுதிசெய்யவேண்டும்.

**21. ஒப்பந்தங்களும் குத்தகைகளும்**

ISGAஇன் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எய்தப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் ISGA உடன் மேற்கொள்ளப்படவேண்டும். நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தங்கள் அப்படியே தொடரும், ஆனால், இந்த ஒப்பந்தங்களின் கீழ்கிடைக்கும் அனைத்து வருமானங்களும் ISGAஇற்கு கொடுக்கப்படுவதை இலங்கை அரசு உறுதிசெய்யவேண்டும். அத்த

# தமிழ் மக்களுக்குச் சமாதானம் என்பது இலங்கை தீவு முழுவதற்குமான சமாதானமே

## ஊடகவியலாளர் இதற்குத் தீவிரமாக பங்களிக்க வேண்டுமெனத் தமிழ்ச்செல்வன் கோரிக்கை



**தமிழ் மக்களுக்குச் சமாதானம் என்பது இலங்கைத் தீவு முழுவதற்கும் சமாதானம் என்ற விதமாகவே பார்க்கப்படவேண்டும். இந்தச் சமர்தானத்தின் செய்தியை நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் எடுத்துச்செல்லும் பொறுப்பு எங்களெல்லோருக்கும் உள்ளது. அதுவும் குறிப்பாக ஊடகவியலாளர்களாகிய உங்களுக்குரியது. ஆகவே, சமாதான முயற்சிகளில் தீவிர பங்காளிகளாக இருந்து நாட்டைப் பொருளாதாரச் சிக்கலிலிருந்து மீட்பதற்கு நீங்களும் தீவிர பங்காளிகளாக வேண்டும் என நாம் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.**

இவ்வாறு அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டவரைவை ஊடகங்களுக்கு வெளியிடுவதற்கு முன் ஆற்றிய முன்னுரையில் தெரிவித்தார்.

அந்த உரையின் முழுவிபரமும் வருமாறு:

வடக்குக்கிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாக அதிகாரசபையை அமைப்பது தொடர்பாக தமிழ்த் தரப்பு ஆலோசனை வரைபை இலங்கை அரசிற்குக் கையளிக்கும் முகமாக நேற்றுக் காலை நோர்வேத் தூதுவரிடம் அது கையளிக்கப்பட்ட பின்னணியில் இன்று கணிசமான அளவில் வந்திருக்கும் உள்ளூர், சர்வதேச ஊடகவியலா ளர்களாகிய உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வரைபு தொடர்பாக விளக்கமளிப்பதற்கு முன்பாக, இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்கள் ஒரு கொடூரமான யுத்தத்திற்கும் இராணுவ ஆக்கிரமிப்பிற்கும் முகம்கொடுத்து நிற்கும் அவலநிலை பற்றி இங்கு குறிப்பிடுவது பொருத்தம் என நினைக்கிறேன். யுத்தத்தால் எண்பதினாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப் பட்டதுடன் அவர்களது சமூக பொருளாதாரக் கட்டுமானங்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

தமிழ் மக்கள் இழந்த சுதந்திரத்தை மீளப்பெற்று சிங்கள சகோதர மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் கௌரவத்தையும் பெற்றுக்கொடுப்பதே எங்கள் போராட்டத்தின் அடிப்படை. சுருங்கச் சொல்வதானால், தமிழ் மக்கள் கேட்பதெல்லாம் இராணுவ அச்சுறுத்தலும் நெருக்குவாரங்களும் அற்ற ஒரு இயல்பு வாழ்வையே.

அரச ஆயுத வன்முறைக்கு எதிரான தற்காப்பு வழியாகவும் எமது பாரம்பரிய வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை வெளியேற்றவுமே நாம் ஆயுதம் ஏந்திப் போராடநேர்ந்தது. இன்று சமாதானத்திற்கு உகந்த சூழல் ஏற்பட்டுள்ள பின்னணியில் ஓர் அரசியல் தீர்வை அடைவதற்கு நாங்கள் அற்பணிப்புடன் செயற்பட்டு வருகிறோம்.

2000ஆம் ஆண்டு எமது தேசியத் தலைவர் அரசியல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வை அடையும் நோக்குடன் ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தினார். அன்றைய அரசு இந்தச் சமாதான முன்னெடுப்பை நிராகரித்து, தமிழ் மக்கள் மீது ஓர் கொடூரமான யுத்தத்தை ஏவிவிட்டது. பல இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே இரவோடிரவாக அகதிகளாக்கப்பட்டனர். யுத்தம் கொண்டுவந்த அழிவு வடக்குக் கிழக்கிற்குமட்டுப்படுத்தப்பட்டது எனக் கூறிவிடமுடியாது யுத்தத்தால் சீரழிந்த பொருளாதாரத்தின் தாக்கம், சாதாரண சிங்கள மக்களையும் பெருமளவு பாதித்தது.

நடைபெற்றுவருகின்ற சமாதான நடவடிக்கைகளில், தெற்கு சமாதானத்தின் பலாபலன்களை அனுபவித்துக்கொண்டிருக்க, வடக்குக் கிழக்கு இனிமேல்தான் இவ்வாறான பயன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. தெற்கில் இயல்புநிலை பெரியளவிற்குத் திரும்பியிருக்க, வடக்குக்கிழக்கில் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது வீடுகளிலிருந்து இடம் பெயர்ந்த நிலையில் தொடர்ந்து தொழில்கள் இன்றியும் சாதாரண வாழ்வை மீளவும் ஆரம்பிக்க முடியாத நிலையிலும் உள்ளனர். சுருக்கமாகச் கூறுவதானால், குறைவாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிக பலாபலன்கள் செல்வதோடு, சமாதானம் இன்றுவரை சமச்சீரற்ற முறையிலேயே கிடைத்துள்ளது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுக்கள் மாதக்கணக்காக அல்லது வருடக்கணக்காகக்கூடத் தொடரக் கூடும் என்ற சாத்தியப்பாட்டைக் கவனத்தில் எடுக்கும் போது, ஒரு நிலையான தீர்வைக் காண்பதற்கான பேச்சுக்கள் தொடர்ந்து கொண்டிருக்க, வடக்குக்கிழக்கு மக்களது தேவைகளை உடனடியாகப் பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது.

தற்போது இங்கு செயற்பட்டுவருகின்ற நிறுவனங்களின் செயற்றிறனின்மை காரணமாகவே வடக்குக்கிழக்கு மக்களது தேவைகள் பெருமளவிற்குப் பூர்த்தி செய்யப்படாமல் விடப்பட்டுள்ளன. மேலும், சமாதானப் பேச்சுக்களின் போது உருவாக்கப்பட்ட உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவும் (சிரான்) ஏனைய உபகுழுக்களும் மக்களது உடனடி மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறியுள்ளன. இந்த உபகுழுக்களது அமைப்பே இதற்குக் காரணம். இது, இந்த உபகுழுக்களைத் திரும்பத்திரும்ப முடக்க நிலைக்கு இட்டுச்சென்று, உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதவாறு அவற்றைச் செயலற்றதாக்கியது.

வடக்குக்கிழக்கு மக்கள் தொடர்ந்து துன்பங்களை அனுபவித்து வருவதன் விளைவாக ஒரு நீண்ட காலத் தீர்வைக் காண்பதற்கு அத்தியாவசியமான அம்சங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தி, இணக்கப்பாட்டை எட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சிக்கலடைந்தன.

இதன் விளைவாக, போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக்கிழக்கில் இயல்பு நிலையைக் கொண்டுவருவதற்கு ஒரு புதிய ஆட்சிமுறை அவசியம் என்பதும் இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை இருக்கவேண்டும் என்பதும் தெட்டத்தெளிவாகியது. இலங்கை அரசாங்கம் தனது 2000ஆம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் ஆரம்பத்தில் முன்வைத்த ஆலோசனையிலும், பயனுள்ள தொடக்கப் புள்ளியாக அமைந்த அந்த ஆலோசனையிலும் இதனை ஏற்றுள்ளது. எப்படியிருப்பினும், இது வரையான சமாதான நடவடிக்கைகளிலிருந்து ஒரு தெளிவான படிப்பினையைக் கற்றுக் கொள்ளமுடிகிறது: அதாவது, பல்லாயிரக் கணக்கில் நாட்டிற்குள்ளேயே இடம் பெயர்ந்தவர்களும் அகதிகளும் தமது இடங்களுக்கு உடனடியாகத் திரும்பி, மீளக்குடியமர்தல் மற்றும் புனர்வாழ்வு அளித்தல் ஆகியனவற்றைப் பூர்த்திசெய்வதற்கும் வடக்குக்கிழக்கின் பொருளாதாரம், கல்வி மற்றும் கலாச்சாரக் கட்டுமானங்களைப் புனரமைப்பதற்கும் எந்தவொரு இடைக்கால அதிகாரசபை எனினும் அது தேவையான அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருப்பது அவசியமாகும். இந்தத் தமிழர் தரப்பு ஆலோசனை, வடக்குக்கிழக்கிலுள்ள தமிழ் மக்களது தேவைகளையும் இலங்கை அரசாங்கத்தினது நியாயபூர்வமான நலன்களையும் கருத்திலெடுத்துள்ளது. இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை உருவாக்குவது, சேவை நிறுவனங்களின் வல்லமையைக் கட்டியெழுப்புவதற்கு மிகவும் காத்திரமான வழி என்பதுடன் இறுதித் தீர்வின் பின்னர் அமையும் அரசிற்கும் இந்த நிறுவன வல்லமை பெரிதும் பலனளிக்கும்.

சர்வதேச வல்லுநர்களுடனும் தற்போது சமாதான வழியில் தீர்க்கப்பட்டுள்ள அல்லது சமாதான வழியில் தீர்ப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்ற இதேபோன்ற பிரச்சினைகளுடன் தொடர்புடைய தரப்புக்களுடனும் முழுமையாகக் கலந்துரையாடி, தமிழ் மக்களில் பெரும்பாலானோருடன் உள்ளூரிலும் வெளியிலும் கணிசமானளவு கலந்துரையாடிய பின்னரே இந்தத் தமிழர் தரப்பு ஆலோசனை தயாரிக்கப்பட்டது.

இந்த ஆலோசனை பற்றி இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் இரு தரப்பிற்கும் வசதி யான இடத்தில், வசதியான காலத்தில் அனுசரணையாளர் முன்னிலையில் கலந்துரையாடலை நடாத்தக்கூடியவாறு ஒரு சந்திப்பை ஒழுங்குசெய்யுமாறு நோர்வே அரசாங்கத்தை நாம் கேட்டுள்ளோம்.

வடக்குக்கிழக்கில் தமிழ் மக்களுக்கு இயல்புநிலையையும் பொருளாதார அபிவிருத்தியையும் சீரியமுறையில் ஏற்படுத்துவதற்காக, இலங்கை அரசுடனான எமது கலந்துரையாடல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை அமைப்பதில் விரைவான இணக்கப்பாட்டை அடைய நாம் விரும்புகிறோம்.

இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபையை அமைப்பது, இத்தீவிலுள்ள பிரச்சினையை அமைதி வழியில் தீர்ப்பதற்கான பேச்சுக்களை நடாத்துவதற்குரிய ஒரு உகந்தசூழலை வழங்குமென நாம் நம்புகிறோம்.

தமிழ் மக்களுக்குச் சமாதானம் என்பது இலங்கைத் தீவு முழுவதற்கும் சமாதானம் என்ற விதமாகவே பார்க்கப்படவேண்டும். இந்தச் சமாதானத்தின் செய்தியை நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் எடுத்துச்செல்லும் பொறுப்பு எங்க ளெல்லோருக்கும் உள்ளது. அதுவும் குறிப்பாக ஊடகவியலாளர்களாகிய உங்களுக்குரியது. ஆகவே, சமாதான முயற்சிகளில் தீவிர பங்காளிகளாக இருந்து நாட்டைப் பொருளாதாரச் சிக்கலிலிருந்து மீட்பதற்கு நீங்களும் தீவிர பங்காளிகளாக வேண்டும் என நாம் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

---

(6ம்பக்கத்தொடர்ச்சி...)

கைய ஒப்பந்தங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாயின் ISGAஇன்சம்மதத்துடனேயேமேற்கொள்ளப்படவேண்டும்.

22. பிணக்குத் தீர்த்தல்

இந்த ஒப்பந்தச் சரத்துக்களுக்கு அர்த்தம் கற்பிப்பதிலோ நடைமுறைப்படுத்துவதிலோ இருதரப்பினரிடையேயும் பிணக்கு ஏதேனும் ஏற்பட்டு, அப்பிணக்கு நோர்வே அரசின் நல்லிணக்கம் உட்பட இரு தரப்பினருக்கும் ஏற்புடைத்தான வேறு ஏதாவது வழியில் தீர்க்கப்படமுடியாவிட்டால் மூன்று அங்கத்தவர்கள் -இதில் இருவர், தரப்பிற்கு ஒருவர் என்ற ரீதியில் இரு தரப்பினராலும் நியமிக்கப்படுவர்- கொண்ட ஓர் இணக்கமன்றின் முன் விசாரிக்கப்படும். இருதரப்பினராலும் கூட்டாக நியமிக்கப்படும் மூன்றாவது அங்கத்தவர் மன்றின் தலைவராகச் செயற்படுவார். தலைவர் நியமனத்தில் ஏதேனும் கருத்துவேறுபாடு ஏற்படுமிடத்து, மன்றின் தலைவரை நியமிக்குமாறு சர்வதேச நீதிமன்றின் தலைவரை (President of the International Court of Justice) இரு தரப்பினரும் கோருவர்.

எந்தவொரு தகராறு பற்றியும் தீர்மானமெடுக்கையில், பிணக்குத்தீர்ப்பவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளதும் இலங்கை அரசாங்கத்தினதும் சமத்துவமான நிலையை உறுதிசெய்வதோடு, இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை மாத்திரமே உசாத்துணையாகக் கொண்டு பிணக்குகளைத் தீர்ப்பர்.

பிணக்குத்தீர்ப்பவர்களது தீர்மானம் இறுதியானதாகவும் முடிவானதாகவும் இருப்பதோடு, பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்புக்களையும் கட்டுப்படுத்தும்.

23. செயற்படும் காலம்

பேச்சுவார்த்தை மூலமான நிரந்தரத் தீர்வொன்றின் விளைவாக வடக்குக்கிழக்கிற்கென ஓர் புதிய அரசாங்கம் நிறுவப்படும்வரை, இந்த ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும். அத்தகைய ஒரு தீர்வை எவ்வளவு விரைவாக அடையமுடியுமோ அவ்வளவு விரைவாக அடைவதற்கு இரு தரப்பும் நல்லெண்ணத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும். இருப்பினும்கூட, இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கிடையே நான்கு வருடங்களின் முடிவில் இறுதி உடன்படிக்கை எதுவும் எட்டப்படாவிட்டால், ஒப்பந்தத்தின் விதிகளை மேலும் அதிகரித்து, தெளிவுபடுத்தி, வலுப்படுத்தும் நோக்கத்தில் இருதரப்பும் நல்லெண்ணத்தோடு பேச்சுக்களில் ஈடுபடும்.

# இ.நி.குறித்த...

● இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அரசியல் யாப்பிற்கு முரணானதாக அமைக்கப்பட்டது என சில சந்தேகங்கள் உள்ளன. அது தொடர்பான உங்களது கருத்து யாது?

இது தொடர்பாக நாம் பலமுறை விளக்கியிருக்கிறோம். இலங்கை அரசியலமைப்புக்குட்பட்டு தமிழர்களது பிரச்சினைக்குத் தீர்வைத் தேட முடியாது. ஏனெனில் இலங்கை அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் தமிழ் மக்கள் எந்தக்கட்டத்திலும் இணைக்கப்படவில்லை; அவர்களது அங்கீகாரம்பெறப்படவுமில்லை. இந்த இலங்கை அரசியல் அமைப்புத்தான் தமிழ் மக்களது போராட்டத்தின் அதிஉச்சநிலைக்குக் காரணமான ஒன்று. ஏனெனில் இலங்கை அரசியல் அமைப்பு தமிழ் மக்களைப் புறக்கணித்து தமிழ் மக்களின் நலன்களை உதாசீனப்படுத்தியவகையில் தான் உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே இங்கு ஏற்பட்ட இனப்பிணக்கும் இனமோதலும் இந்த அரசியல் அமைப்பின் அடிப்படையிலே தான் எழுந்தது என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அந்த அடிப்படையில் சர்வதேச அளவில் யுத்தம் நடைபெற்ற இனப்பிணக்குகள் இடம்பெற்ற இடங்களிலெல்லாம் பிரச்சினைக்கு தீர்வு காண்கின்ற பொழுது அரசியல் அமைப்புக்குட்பட்டு பிரச்சினைக்குத் தீர்வு காணமுயலவில்லை. ஏனெனில் மோதலே அதனடிப்படையில் தான் எழுந்தது.

அந்த வகையில் நீண்ட காலமாக பெரும் அர்ப்பணிப்புகளை செய்து போராடியதமிழ் மக்கள் இந்த அரசியல் அமைப்பு தமக்கு விரோதமானது எனவும் அடிமை சாசனமாகவுமே இந்த அரசியலமைப்பைப் பார்க்கிறார்கள். அந்த வகையில் அரசியலமைப்புக்கு உட்பட்டு பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பது சாத்தியமற்றது.

● அரசாங்கம் அரசியலமைப்புக்கு வெளியாகச் சென்று செயற்பட்டால் உயர் நீதிமன்றத்தால் இதுதடை செய்யப்படலாமல்லவா?

எம்மைப் பொறுத்த வரையில் இது தமிழர் தேசத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடு. ஆகவே இலங்கைத்தீவில் சமாதானத்தைக் கொண்டு வருவதாக இருந்தால் சாத்தியப்பாடானதும் யதார்த்தபூர்வமானதுமான புதிய நோக்கில் சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது. இவ்வாறான சிந்தனையோட்டங்களுக்கூடாகவே உலக அரங்கில் அமைதி, சமாதான முயற்சிகள் வெற்றியளித்துள்ளன. அந்தவகையில்த் தான் இப்பிரச்சினையைப் பார்க்க வேண்டும். இங்குள்ள அரசியல் அதிகார முரண்பாடுகளுடன் இதை மையப்படுத்திப் பார்க்காது பொதுநோக்குடன் தீர்வைக் காண்கின்ற வழியைத் தேடுவோமானால் தான் இப்பிரச்சினைக்கான தீர்வை நாம் காணலாம். ஆகவே உச்சநீதிமன்றத்தையோ அல்லது இலங்கை அரசையோ அல்லது இனவாத சக்திகளையோ அன்றி எதிர்க்கட்சிகளையோ திருப்திப்படுத்தித் தீர்வு காணமுயன்றால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது என்றே நான் கருதுகிறேன்.

● நீங்கள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என உங்களைக் கூறிக் கொள்கிறீர்கள். அப்படியானால் நீங்கள் இந்த இடைக்கால நிர்வாக சபைக்கு ஒரு தேர்தல் வைத்து அதன் மூலம் இந்த நிர்வாக சபையை ஏன் ஏற்படுத்த முடியாது?

நாம் தமிழ்மக்களினுடைய பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டிருந்தால் மட்டும் தமிழ் மக்களினுடைய பிரதிநிதிகளாக வந்துவிட முடியாது.

கடந்த 25 வருடங்களாக இராணுவ ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக நாம் தொடர்ச்சியாகப் போராடி பதினெண்ணாயிரத்திற்கும் மேலான இளைஞர், யுவதிகளை இழந்து பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்து இந்த அரசியல் சூழ்நிலைக்கும் அரசியல் அங்கீகாரம் பெற்ற இந்த நிலைக்கும் நாம் வந்திருக்கிறோம். ஆகவே தமிழ்மக்களினுடைய பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு நாம் முன்னுக்கு வரவில்லை. எமது மக்களினுடைய அபிலாசைகளுக்காக போராடியிருக்கிறோம்.

எமது தலைவர் எத்தகைய சக்திகளுக்கும் அடிபணியாது எமது மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க உறுதியாக நின்று போராடியிருக்கிறார். அதுமட்டுமல்ல 2000ஆம் ஆண்டு தேர்தலின் போது தமிழர் தாயகப் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தலிலே தமிழ்க் கூட்டமைப்பு என்கின்ற நான்கு கட்சிகள் இணைந்த கூட்டமைப்பு ஒரு நிலைப்பாட்டை தமிழ்மக்களிடம் முன்வைத்தது. அதாவது தமிழீழ விடுதலைப்புலிகள் தான் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை முன்வைத்து தேர்தலில் நின்றார்கள். அந்த நிலையில் தமிழர் தாயகத்தில் வாழ்கின்ற பெரும்பான்மையான தமிழ்மக்கள் இதை ஆதரித்து வாக்களித்திருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, பல இடங்களிலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் கூடி தமிழர்களின் தலைவராக எமது தலைவரையும் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் அபிலாசைகளை, கோரிக்கைகளை நாங்கள் உறுதியுடன் பற்றி நின்று போராடியிருக்கிறோம்.

இந்தவகையில் தான் நாங்கள் தமிழ் மக்களினுடைய பிரதிநிதிகளாக மக்களாலே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோம். மக்களின் ஆதரவோடு தான் பாரிய விடுதலை அமைப்பாக எமது விடுதலை அமைப்பைத் தலைவர் கட்டியெழுப்பியிருக்கிறார். இந்த வளர்ச்சிப் போக்கு காரணமாகவே இன்று இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பேச முன்வந்துள்ளது. இதை சர்வதேச சமூகமும் ஏற்றுள்ளது. இந்த யதார்த்தத்தை நீங்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

● நீங்கள் தமிழ்மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடுகிறோம் என சொல்கிறீர்கள். ஆனால் உங்களுடைய நிர்வாகத்தின் கீழ் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் எதிர்க்கருத்துக் கொண்டவர்களைக் கொலை செய்வதும், பிள்ளைகளைக் கடத்துவதும், ஆட்களைக் கடத்துவதும் போன்ற ஒரு பாசிச என்று கூறமுடியாவிட்டாலும் சனநாயகத்திற்கு விரோதமான செயல்களை செய்துகொண்டு எப்படி இப்படியான ஒரு இடைக்கால நிர்வாக சபையை சனநாயக பண்புகளுக்கமைய அமைப்போம் என நீங்கள் சொல்ல முடியுமா?

விடுதலைப்புலிகள் மீது ஊகத்தின் அடிப்படையில் சுமத்தப்படுகின்ற அபாண்டமானக் குற்றசாட்டுக்களை நாம் மறுக்கின்றோம். அரசியல் படுகொலைகள் சம்பந்தமாக எம்மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. இந்தச் சம்பவங்கள் அநேகமாக இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தான் நடைபெறுகின்றன. அங்கு சட்டம் ஒழுங்கைப்பேண சிறிலங்காவின் காவல்துறை இருக்கின்றது. நீதி அமைப்பு இருக்கின்றது. இராணுவம் இருக்கிறது. அத்துடன் பல்வேறுபட்ட அவர்களுடன் இயங்கும் மாற்றுக்குழுக்கள் இருக்கின்றன. கண்காணிப்புக்குழு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. பல்வேறுபட்ட மனித உரிமைகள் குழுக்கள் இருக்கின்றன. இத்தனை கட்டமைப்புக்கள் இருக்கின்ற சூழ்நிலையில் இங்கு நடக்கின்ற இப்படுகொலைகள் சம்பந்தமான உண்மை நிலையை அறிவதற்கு முயன்றால் நிச்சயமாக சம்பவங்கள் தொடர்பான உண்மை நிலையை அறியமுடியும்.

எம்மைப் பொறுத்த வரையில் இச்சம்பவங்களுடன் திட்டமிட்டு விடுதலைப் புலிகளைச் சம்மந்தப்படுத்தி புலிகள் மீது குற்றம் சுமத்தி புலிகளுக்கு இன்று ஏற்பட்டு வருகின்ற 'நல்லபிப்பிராயங்கள், சர்வதேச நாடுகளில் கிடைக்கின்ற அங்கீகாரங்களை சீர்குலைக்கின்ற நோக்கோடு உருவாக்கப்படுகின்ற திட்டமிட்ட கொலைகளாகவே தான் நாம் இவற்றைப் பார்க்கின்றோம். ஏனெனில் துரதிர்ஷ்டவசமாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் முரண்பட்ட சக்திகள் பாதிக்கப்படுகின்ற காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளை குற்றம் சுமத்துவது சாதகமாக உள்ளது. சட்டம் ஒழுங்கை பேணும் கட்டமைப்புக்கள் உள்ளன. அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவர்கள் உண்மையைக் கண்டறிந்து உறுதியான வகையில் அந்தக் குற்றச் சாட்டுக்களை முன்வைக்கலாம். அந்தக் குற்றச் சாட்டுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டிருப்பார்களானால் நிச்சயமாக எமது தலைமைப்பீடம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும். ஏனெனில் இந்தச்சமாதான நடவடிக்கையை எமது தலைவர் மிகுந்த ஈடுபாடும் அர்ப்பணிப்பும் கொண்டு செயற்படுத்திவருகிறார். அந்த வகையில் சகல மாவட்டங்களிலும் எமது தளபதிகள் பொறுப்பாளர்களுக்கு இறுக்கமான பணிப்பு எமது தலைவரால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச்சமாதானச் சூழலை சீர்குலைக்கின்ற எந்த நடவடிக்கையிலும் எவரும் ஈடுபடக் கூடாது என்பது எமது தலைவருடைய இறுக்கமான உத்தரவு. இதனைமீறி இத்தகைய சம்பவங்கள்நடக்கும் என நான் நம்பவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இத்தகைய கொலைகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதை நாம் உறுதியாகக் கூறுகின்றோம்.

இந்தச் சம்பவங்களின் உண்மைநிலைகளை ஆராய்ந்து கண்டறியும் முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இந்தப்படுகொலைகள் நிச்சயமாக சர்வதேச சமூகம் ஆர்வத்துடன் பார்க்கின்ற சமாதான நடவடிக்கைகளில் சோர்வை ஏற்படுத்தும் நோக்குடனே மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே நாம் இதைக் கருதுகிறோம்.

அடுத்ததாக சிறுவர்களை நாம் பலாத்காரமாகப் படையில் இணைப்பதாக தெரிவித்திருந்தீர்கள். நாம் இந்த இரண்டு வருடகாலத்துக்குள் எங்களது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்தியிருக்கிறோம். அதாவது எமது நூற்றுக்கணக்கான ஆட்சேர்ப்பு மையங்களை மூடி தற்போது அரசியல் பணிகளை மேற்கொண்டுவருகிறோம். ஆயினும் எமது அமைப்பில் பல புதிய உறுப்பினர்கள் இணைந்து கொள்வது என்பது உண்மை. எமது அரசியல் அலுவலகங்களில் தாமாக தேடிவந்து இணைகின்றார்கள். நாம். எமது விடுதலை அமைப்பில் பல்வேறுபட்ட கட்டமைப்புக்களை இன்று நிறுவிவருகின்றோம். நிர்வாகக் கட்டமைப்புகள், புனர்வாழ்வு, புனரமைப்பு மீள் குடியேற்றப பணிகளை செய்வதற்கான பல கட்டமைப்புகளை எமது அமைப்புக்குள் நாம் நிறுவியிருக்கிறோம். இது போன்ற பல மக்கள் பணிகளை முன்னெடுத்துச் செல்ல எமக்கு பல எண்ணிக்கையான உறுப்பினர்களை நாம் இணைத்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் நாம் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டாலும் பலர் தமது சுயவிருப்புடனும் ஆர்வத்துடனும் எங்களுடன் இணைந்து கொள்கின்றனர். இதில் சிறுவர்களும் வருகின்றனர். சிறுவர்கள் பல நூற்றுக் கணக்கில் வந்து இணைகின்ற நிலை தொடர்கின்றது. இவ்வாறு ஏன் இணைகிறார்கள் என்ற காரணங்களை நீங்கள் மீட்டுப் பார்க்கவேண்டும்.

சிறுவர்களினுடைய பாதிப்புக்கள் இன்னும் நீங்கவில்லை. அவர்களது நலன்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.இதனால் அவர்கள் எம்மிடம் தஞ்சமடைகிறார்கள். நாம் இங்கிருக்கும் தொண்டர்அமைப்பு களிடம் அவர்களைக் கையளிக்கிறோம். பெற்றோர்களிடம் கையளிக்கிறோம். யுனிசெவ் நிறுவனத்துடன் ஒருதிட்டம் நடைமுறைப்படுத்திவருகின்றோம். அவர்களிடம் மறுவாழ்வுப்பணிகளுக்காக பல எண்ணிக்கையான சிறுவர்களை கையளித்திருக்கிறோம். ஆகவே எம்மீது சுமத்தப்படுகின்ற தவறான அபாண்டமான குற்றச் சாட்டாகவே நாம் இதனைப்பார்க்கின்றோம்.

● இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக நீங்கள் முன்வைக்கின்ற யோசனைகளுக்கு அரசாங்கம் உரிய சாதகமான பதிலை வழங்காது விட்டால் அல்லது இதில் சில மாற்றங்கள் திருத்தங்கள் போன்றவற்றைச்செய்யுமாறு உங்களைப்பணித்தால் நீங்கள் திருத்தங்களை மேற்கொள்ளத்தயாரா? அல்லது நீங்கள் வேறு ஏதாவது தீர்மானங்களை எடுப்பீர்களா?

நாங்கள் ஒரு வரைவினைக் கையளித்திருக்கிறோம். இது ஒரு நடைமுறைச்சாத்திமானதும் கடந்தகால அனுபவங்களைப் படிப்பினையாக கொண்டும் குறிப்பாக இந்த ஒன்றரை இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னுதாரணங்களும் இதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் சமபிரதிநிதித்துவத்துடன் உருவாக்கப்பட்டஉபகுழு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இது புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம், அபிவிருத்தி என்ற குறிக்கோள்களிற்காக அவசர புனர்நிர்மாணப்பணிகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு செயற்படமுடியாத நிலையை அடைந்துள்ளது. அதற்குக் காரணம் வடகிழக்கில் தெளிவான அதிகாரமுள்ள நிர்வாகம் நடைமுறையில் இல்லாமையே.

ஆகவே சமகால அனுபவங்கள். என்பவற்றை நாம் படிப்பினையாகக் கொண்டு எங்களுடைய மக்களின் இன்றைய தேவைகள் அபிலாசைகளையும் நாங்கள் கருத்திலே எடுத்து சர்வதேச அளவில் இப்படியான பிணக்குகளுக்கு இடைக்கால கட்டமைப்பை எப்படி கையாண்டிருக்கின்றார்கள் என்ற சர்வதேச அளவில் பெற்ற பல அனுபவங்களை பல நிபுணர்களுடன் கலந்துரையாடி, அந்த அனுபவங்களைக் கொண்டு ஒரு நடைமுறைச்சாத்தியமான ஒரு வரைவை நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம். இலங்கை அரசுக்கும் ஏற்கனவே பல படிப்பினைகள் உண்டு. அந்த வகையில் இலங்கை அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ளும் என்று நாங்கள் முழுமையாக நம்புகின்றோம். சர்வதேச சமூகமும் இதை ஏற்றுக்கொள்ளும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

எனவே எங்களது வரைவை ஏற்றுக் கொண்டு அரசாங்கம் பேசமுன்வரும். நாங்கள் பேச்சுக்களின் போது தெளிவின்மைகளைத் தெளிவாக்கிக் கொள்ளலாம். ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் நாம் அதை நீக்கிக் கொள்ளலாம். ஆனால் நடைமுறைச்சாத்தியமான பூரண அதிகாரமுள்ள ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பொன்றை நிறுவுவது தவிர்க்க முடியாததும் அவசியமானதும்.

● இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்து ஓர் இடைக்கால தன்னாட்சி அலகு வந்து விட்டால் வட கிழக்கிலுள்ள பாதுகாப்பு ஒழுங்கிற்கு யார் பொறுப்பு?

வடகிழக்கில் சட்ட ஒழுங்கைப் பேணுவதும் பாதுகாப்பும் இங்கு ஏற்படுத்தப்படுகின்ற உள்ளூர் அமைப்பில் அதாவது வட கிழக்கிற்கு ஏற்படுத்தப்படுகின்ற நிர்வாகக் கட்டமைப்பிற்கு ஊடாக ஏற்படுத்துவது என்பது இயல்பான ஒன்று.

● இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசம் என வடக்கு கிழக்கில் இரண்டு பிரதேசங்கள் இருப்பதனால் இடைக்கால நிர்வாகம் எப்படி மேற்கொள்ளப்படப்போகிறது.?

வடக்கு கிழக்கு தமிழர்கள் கூடிய பிரதேசமாக மிக நீண்ட காலமாக - பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக -இருந்து வருகின்றது. இங்கு அரச கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம், விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப்பிரதேசம் என்ற முரண்பாடுகளுக்கு அப்பாலும், வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த ஒரு நிர்வாக அலகை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம். இதில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசம், விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசம் என்பவற்றிலிருந்து ஒருபடி மேலே சென்று வடக்கு கிழக்கு முழுமையான அதாவது தாயகப் பிரதேசம் முழுமையாக நிர்வகிக்கக் கூடிய நிர்வாக அலகு பற்றிய பிரேரணையை நாம் முன்வைத்துள்ளோம். ஆகவே இது அரச கட்டுப் பாட்டுப் பிரதேசம் என்றும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும் நாங்கள் வரையறைகளைச் செய்வது, நாங்கள் கொண்டுவந்துள்ள ஆலோசனை வரைவில் தேவையற்ற ஒரு விடயமாகும்.

● வடக்கு கிழக்கு பிரதேசத்தில் குடியேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதாவது வேறு இனத்தவர்களைக் கொண்டு வந்து குடியமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். இவர்களின் நிலை என்னவாக இருக்கும்?

தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டது என்பது மிகவும் முக்கியமான பிரச்சினையாகும். இப் பிரச்சினை சம்பந்தமாக நாங்கள் இரண்டு தரப்பும் பேச்சுக்கள் நடத்தி தீர்மானம் எடுக்க வேண்டிய சூழலில் அது பற்றித் தீர்மானம் எடுப்போம். நிச்சயமாக இந்த விடயம் பற்றி கவனத்தில் எடுப்போம்.

● இதுபற்றி இடைக்கால நிர்வாக சபையின் நகலில் சேர்க்கப்பட்டுள்ளதா?

இடைக்கால நிர்வாக சபையின் நகலில் நாங்கள் கூறியுள்ளோம். வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட மக்களுடைய நிலங்களில், அவர்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியது அவசியமானது. இது இடைக்கால நிர்வாகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மனித உரிமை ஆகும். இது கண்டிப்பாகத் தீர்வு காணப்பட வேண்டியது ஆகும்.

● உதாரணமாக வெலிஓயா போன்ற பிரதேசங்களில் பலர் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். ஆகவே இவ்வாறு குடியமர்த்தப்பட்டுள்ளவர்களின் நிலை என்ன?

இது சம்பந்தமாக எதிர்காலத்தில் நாங்கள் முன்னெடுக்கின்ற பேச்சுக்களின் போது, தீர்வு காணுவோம்.

● சனாதிபதி சந்திரிகா ஆட்சியைக் கலைத்து புதிய தேர்தலை அறிவித்தால் உங்கள் நிலைப்பாடு எப்படி இருக்கும்?

நாங்கள் தென்னிலங்கையில் நடைபெறுகின்ற அதிகார, அரசியல் போட்டிகள் பற்றி கருத்துக்கள் கூற விரும்பவில்லை. நீண்ட காலமாக சிங்கள தேசத்தின் அரசியலில் இருக்கும் பெரிய வரலாற்று உண்மை எப்போதும் ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கங்கள் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிக்கின்ற போது, எதிர்க்கட்சிகளும் அங்குள்ள இனவாதக் கட்சிகளும் அதற்கு எதிராகவும் சீர்குலைப்பிலும் ஈடுபடுவது. இது கடந்த 50 வருடகால வரலாறு. அதனுடைய தொடர்ச்சியாவே சனாதிபதி சந்திரிகாவும், அங்குள்ள இனவாதக் கட்சிகளும், இனவாத அமைப்புக்களும் இன்றுள்ளஅரசாங்கத்தைச் சீகுலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. ஆகவே தென்னிலங்கை அரசியலில் தொடர்ச்சியாக நடைபெறும் இந்த வரலாற்று உண்மையும் நிகழ்வும் சம்பந்தமாக நாங்கள் எவ்வித கருத்தும் கூற முடியாது. எங்களைப் பொறுத்தவரை நாங்கள் தமிழ் மக்களின் எதிர்காலம், அரசியல் அபிலாசைகள் பற்றிய விடயத்திலேயே எப்போதும் உறுதியாக இருப்போம்.

● இரண்டு வருடகாலத்தின் பின் ஐ.தே. கட்சியுடனான நம்பிக்கை எப்படியுள்ளது. அதாவது இரண்டுவருடத்தின் பின்னரான தற்போதைய நிலை என்ன?

நாங்கள் தனித்து ஐக்கிய தேசியக் கட்சியுடனான உறவு பற்றிக் கூற முடியாது ஆனால் அவர்கள் துணிவோடும் துணிச்சலோடும் சமாதான முயற்சிகளில் ஈடுபட முனைந்தார்கள். இதன் தொடர்ச்சியாக நடந்த நிகழ்வுகளால் அவர்களது துணிச்சலிலும் முற்போக்கான நடவடிக்கைகளிலும் சிறிது தொய்வு ஏற்பட்டுள்ளது.

● மக்களின் ஆட்சி ஒன்று இடைக்கால நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் இராணுவத்தினர் இதனுடன் தொடர்பு பட்டிருக்கத் தேவையில்லை என்று கூறியதுபோதே விதத்தில் விடுதலைப்புலிகளும் தங்களது ஆயுதங்களைக் கைவிடுவார்களா?

இரண்டு தரப்பிலுமுள்ள இராணுவம் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இடைக்காலத் தீர்வில் சம்பந்தப்பட்டிருக்கத் தேவையில்லை என்று தான் நான் நினைக்கின்றேன் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை மக்களின் வாழ்விடங்களில் செறிவாக வாழும் பிரதேசங்களில் படையரண்களையோ, காவலரண்களையோ அமைத்து வைத்திருக்க வில்லை. விடுதலைப் புலிகளினுடைய இராணுவம் அது தமிழ் மக்களின் இராணுவம். அது சமாதான நடவடிக்கைகளைப் புரிந்து கொண்டு மக்கள் இயல்பாக சொந்த இடங்களில் வாழ்வதற்கு வழிவிட்டு, அது தன்னை ஒருபுறம்போக்கான இடத்திற்கு நகர்த்தியுள்ளது. அதேபோல் சிறிலங்கா இராணுவமும் நடந்து கொள்ளுமானால் இங்கு இயல்பு நிலையைக் கொண்டுவந்து மக்களின் இன்றைய அவசரத்தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியதாக இருக்கும். இதில் நாம் இரண்டு தரப்பு இராணுவத்தையும் சம்பந்தப்படுத்துவது இந்த இடைக்கால நிர்வாக சபை உருவாக்கத்தில் இடைக்கால ஒழுங்கில் தேவையற்ற ஒன்று என நான் கருதுகின்றேன்.

● இது தொடர்பான பேச்சுவார்த்தை எவ்வளவு காலம் நடைபெறவுள்ளது? இதில் விட்டுக்கொடுப்புகள் இருக்குமா உங்கள் தரப்பில்?

எங்களைப் பொறுத்தவரை இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான ஆலோசனைகள் அடங்கிய வரைவைக் கையளித்துள்ளோம். அனுசரணையாளர்களும் சிறிலங்கா அரசும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் பொங்கு தமிழ் நிகழ்வெனில் உயிரைப் பணயம் வைத்தாவது தடுப்போம்

## -சிஹல உறுமய தலைவர் கூறுகின்றார்

**சிங்கள-தமிழ் கலாச்சார நிகழ்வு என்ற போர்வையில் பொங்கு தமிழ் விழாவை மீண்டும் கொழும்பில் நடத்தினால் அதற்கெதிராக உயிரைப் பணயம் வைத்தாகிலும் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.**

இந்தச் சம்பவத்தின் போது புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக் கால நிர்வாக சபை நேரேணைக்கு எதிராகத் தெற்கில் தோன்றும் எதிர்ப்புக்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி கட்சியின் கொழும்பு செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில தினங்களுக்கு முன் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்-சிங்கள கலாச்சார நிகழ்வில் கலந்துகொண்டோரில் 75 வீதமானோர் புலிகள் எனக் கூறியுள்ளார்.

இது ஒரு முக்கிய விழாவன்றி பிரபாவைச் சிறந்த வீரராக வெளிக்காட்ட எடுக்கப்பட்ட நிகழ்வாகும். கொழும்பில் இதனை நடத்துவதற்குப் புளொட்,ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளும் எதிர்த்த நிலையில் சிஹல உறுமய மீது பழி சுமத்துவது நல்லதல்ல.

அரசின் கீழ்மட்ட செயலின் மூலம் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. அப்பாவியான எமது கட்சி உறுப்பினர் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஒன்றுகூடல்

வேலையற்றோர்களுக்கான வேலைவாய்ப்பு சம்பந்தமாக ஒன்றுகூடல் நாளை திங்கட்கிழமை பிபகல் 3.00மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறும். எனவே வேலையற்ற 18-35 வயதுக்குட்பட்டவர்களும் தரம் 9 சித்தியடைந்த அனைவரும் கலந்து கொள்ளலாம் எனக் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

# மல்லாவி குமுதன் குடியிருப்பில் முன்பள்ளியொன்று தேவை

(மல்லாவி)

மல்லாவி குமுதன் குடியிருப்பு நலன்புரி நிலையத்தில் சுமார் 150 குடும்பங்கள் இருந்த போதும் அங்கு முன்பள்ளி இன்மையால் சிறுவர்கள் கல்வியில் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

மேலும் குமுதன் குடியிருப்பு நலன்புரி நிலையத்தில் 50 சிறார்கள் அடிப்படைக் கல்வியின்றி உள்ளனர். இவர்கள் முன்பள்ளி செல்வதானால் 1மைல் தூரம் செல்ல வேண்டும்.

சிறுவர்கள் இவ்வளவு தூரம் செல்வதினால் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் இதற்கென குமுதன் குடியிருப்பில் மாவீரர் படிப்பகம் இருந்த போதும் முன்பள்ளி அமைக்கப்படவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவித்தனர். (24)

# ஐந்து மாகாண சபைகளில் நாம் இலகுவாக வெற்றிபெறுவோம்

## அமைச்சர் திசாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஐந்து மாகாணங்களில் இலகுவான வெற்றியை ஈட்டுவோம் என ஐக்கியதேசிய முன்னணியின் விவசாய சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா அம்பாந்தோட்டையில் நடந்த கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்துள்ளதால் அரசாங்க உத்தியோகத்தர்களது சம்பளம் அதிகரிக்கப்படுவதோடு இரசாயன பொருட்களின் விலையும் குறைக்கப் படவுள்ளதாகத் தெரிவித்தார். நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதோடு நாட்டின் அபிவிருத்தியும் வளர்ச்சியடையுமாயின் எதிர்காலத்தில் வரும் தேர்தல்களில் நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என அமைச்சர் தெரிவித்தார். விவசாயிகளுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுப்பதோடு அதற்கு வசதிகளும் செய்து கொடுக்கப்படுமென அமைச்சர் மேலும் கூறினார்.

# வேலையற்ற பட்டதாரிகள் 1250 பேருக்கு விரைவில் நியமனம்

(கொழும்பு)

ஆசிரியர் சேவைக்கு 1250 பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர்.

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்வதென அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறிய கருத்துக்கு திறைசேரி அங்கீகாரம் அளித்துள்ளது.

விண்ணப்பங்களைக் கோரி தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. மேலும் 1500 ஆசிரியர்களை நியமிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கல்வியமைச்சர் திறைசேரியிடம் கேட்டுள்ளார். புதிதாக நியமனம் பெறுவோர் கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் 05 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது

# போராட்டத்தில் இணைய முன்வந்த இரு சிறுமிகள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

'விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைய முன்வந்த 18 வயது நிரம்பாத இரு சிறுமிகள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை யாழ்.வைமன் வீதியிலுள்ள நல்லூர் கோட்ட அரசியல்துறை செயலகத்தில் வைத்து புனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு யாழ் அலுவலகப் பிரதிநிதிகள் முன்னிலையில் யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சுஸ்வரன் ஆகியோரால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (33)

# கட்டாக்காலிகளால் இடையூறு

முள்ளியவளைப் பிரதேசத்தில் முள்ளியவளை பிரதான வீதியிலும் வற்றாப்பளை வீதியிலும், காட்டுவிநாயகர் கோவிலுக்கு முன்பான வீதியிலும் இரவு வேளைகளில் பெருமளவான கட்டாக்காலி கால்நடைகள் கிடப்பதால் அவ்வீதி வாகனப் போக்குவரவு மற்றும் துவிச்சக்கரவண்டிகளில் மோட்டார் வண்டிகளில் செல்வோர் எனப் பலரும் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே அவ்விடங்களை தாண்டிச் செல்கின்றனர். மேற்படி இடங்களில் உள்ள கட்டாக்காலி கால்நடைகளை விலகிச் செல்ல முயன்ற பல துவிச்சக்கரவண்டிகளில் செல்வோர் கட்டாக்காலிகள் இடறிப்பாய்ந்ததால் சிறு சிறு விபத்துக்களும் ஏற்பட்டு வந்துள்ளது மட்டுமன்றி சில கட்டாக்காலி கால்நடைகள் வீட்டுத்தோட்டங்களில் இரவில் புகுந்து நாசம் விளைவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மாவீரர் துயிலும் இல்லத்தில் மாணவர்கள் சிரமதானம்

(உடையார்கட்டு)

விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் உடையார்கட்டு மகாவித்தியாலய மாணவர்கள் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு இந்த சிரமதானப் பணி இடம் பெற்றது.

கடந்த புதன் அன்று மேற்படி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் சிரமதானப் பணியை மேற்கொண்டனர். (19)

# நிமலராஜன் கொலைச் சந்தேக நபரை மருத்துவ சோதனைக்குட்படுத்த உத்தரவு

(வடமராட்சி)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினரது மருத்துவச் சான்றிதழை சமர்ப்பிக்க யாழ். நீதவான் பொலிசாருக்குப் பணித்துள்ளார்.

நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பில் ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினரான பா. உதயபவன் என்பவர் கடந்த மாதம் 5ஆம் திகதி திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிசாரால் கைது செய்யப்பட்ட இவர், சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாக சந்தேக நபரின் தாயாரால் யாழ். நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இம்மனு மீதான விசாரணை கடந்த வியாழனன்று யாழ். நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையிலேயே குறித்த சந்தேக நபரது மருத்துவச் சான்றிதழை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடமிருந்து பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்க நீதவான் இ.த. விக்னராஜா பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த 5ஆவது சந்தேக நபர் இவராவார்.

விசாரணைகளை நவம்பர் 14ஆம் திகதிக்கு நீதவான் பிற்போட்டுள்ளார். (27)

# கால்நடைகளைக் கட்டுப்படுத்த மக்களுக்கு வேண்டுகை

முல்லைமாவட்டத்தில் தற்போது காலபோக பயிர்செய்கை நடைபெற்றுவருகின்றது. 30-10-2003 உடன் நெல் விதைப்பு நிறுத்தப் படுகிறது.

31.10.2003 தொடக்கம் 31.03.2004 வரை கால்நடைகளைக் கட்டி வைத்து பராமரிக்குமாறு முள்ளியவளை கமநலசேவை நிலையத்தினரும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கேட்டுக் கொள்கின்றது.

இதற்கமைவாக பயிர் செய்கையில் ஈடுபடுவோர்,கால்நடை வளர்ப்போர் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. (20)

# முல்லை.ஒப்பந்தக்காரர்களுடன் சிறப்புக் கலந்துரையாடல்

முல்லைமாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும், நடைபெறவுள்ள அபிவிருத்திப் பணிக்கான ஒப்பந்தக்காரர்களுக்கான கலந்துரையாடல் கடந்த 28ஆம் திகதி அன்று முல்லை மாவட்டநிர்வாணிகள் சங்கத்தில் நடைபெற்றது.

இதில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளை எவ்வாறு விரைவாகச் செய்யமுடியும் எனவும், தொடங்கவுள்ள வேலைகள் எவ்வாறு இருக்க வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டது. (20)

# கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

மக்களால் தவறவிடப்பட்ட கீழ் வரும் சில முக்கிய ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டு தற்போது *கிளிநொச்சி மக்கள் வங்கிக்கிளை* முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரித்துடையவர்கள் கிளி. மக்கள் வங்கியில் அலுவலக நேரங்களில் சமுகம் கொடுத்து பெற்றுக்கொள்ளும் வண்ணம் கிளி.மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் செபாலராஜா வேண்டியுள்ளார்.

கிருஸ்ணபிள்ளை ஜசிதரன், கச்சாய் வீதி, கிளிநொச்சி தே.அ.அ. இல.782320564 V, ஆ. இராமச்சந்திரன் திருநகர்மேற்கு தற்காலிக அடையாள அட்டை, அப்பையா தர்மலிங்கம் 630, 7ஆம் யூனிற் கல்மடுநகர் என்பவரது சனசக்தி உரித்தாவணம் ஆகியவையே கண்டெடுக்கப்பட்டு வங்கியில் ஒப்படைக்கப்பெற்றுள்ள ஆவணங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

# உதைபந்தாட்டலீக் பொதுக்கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் பொதுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 8ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மேற்படி உதைப்பந்தாட்ட லீக்கின் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

பதிவு செய்ய விரும்பும் கழகங்கள் நவம்பர் 5ஆம் திகதிக்கு முன்பாக கிளி உதைபந்தாட்டலீக் செயலர் சு.கனகராசா மாவட்டவிளையாட்டு செயலகம் கிளிநொச்சியில் தொடர்பு கொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர். (சோ)

# அம்பியுலன்ஸ் தட்டுப்பாட்டை நீக்க 125 வண்டிகள் யப்பானிடமிருந்து கோள்வனவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் அம்பியுலன்ஸ் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் பொருட்டு சுகாதார அமைச்சு ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து 125 அம்பியுலன்ஸ் வண்டிகளை கொள்வனவு செய்துள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அத்துடன் தலையில் பாதிப்புக்குள்ளான நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை செய்வதற்கு முன்னர் மூளையுடன் சம்பந்தப்பட்ட பகுதியை பரிசோதனை செய்யும் 'சீரிஸ்கேனர்' எனப்படும் 5 கருவிகளும் சுகாதார அமைச்சினால் கொள்வனவு செய்யப் படவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த சீரிஸ்கேனர் கருவிகள் மட்டக்களப்பு, கொழும்பு, குருநாகல், இரத்தினபுரி, அம்பாறை போன்றவற்றிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

# பொ.ஐ.மு மத்திய குழுவில் ரிச்சர்ட்பத்திரன இணைவு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் கடந்த 27ம் திகதி தாம் மீண்டும் இணைந்து விட்டதாக ரிச்சர்ட்பத்திரன பத்திரிகை ஒன்றுக்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

சனாதிபதியுடனான விசேட சந்திப்பின்போது சனாதிபதி இதனைத் தம்மிடம் தெரிவித்துள்ளதாக கூறிய அவர் அதற்காக சனாதிபதியை தாம் வாழ்த்துவதாகவும் நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தென்பகுதி மாகாணசபை ஒன்றுக்கு முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடலாமே என பத்திரிகையாளர் கேட்டதற்கு தமக்கு அவ்வாறான எண்ணம் கிடையாது எனவும் கட்சியின் வெற்றிக்கு பாடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ரிச்சர்ட்பத்திரன ஐ.தே.க.வில் இணையவிருப்பதாக கூறிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆறிடா ஆண்டுகள் ஆறில்...



பிறப்பு 07-02-1978
வீரச்சாவு 02-11-1997

### கடற்புலி லெப். புலித்தேவன்

*ஜெயபாலசேகரம் செந்தூர்க்குமரன்*
தனிப்பனையூர், செம்பியன்பற்று

(வட்டுவாகல் பகுதியில் தரை தட்டிய சரக்குக் கப்பல் மீதான விமானக் குண்டு வீச்சின்போது...)

களமாடும் கனவோடு – நீ
கடற்புலியாகினாய் – அன்று
கடல் மீது வெடி வீழ – நாம்
கல்லாகினோம் இடியோடு
கருமேகம் மழை சிந்த
காற்றோடு வந்த செய்தியது – எம்
கண்கள் நனைய கதை சொன்னது
கார்த்திகை இரண்டுடனே
கரைந்தது ஆண்டுகள் ஆறு.
கடல் நடுவே உன்னுடன் சென்றவர் பதிநாலு
கண்ணீரோடு அஞ்சலிக்கின்றோம்
கண்மணிகள் உமை இன்று.

(3144) குடும்பத்தினர்.

## வேவுவிமானம் பறப்பு

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான வேவுவிமானம் ஒன்று நேற்று முல்லைத்தீவுக் கரையோரப் பகுதிகளில் வேவுபார்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. சுமார் 1மணி நேரம் பறந்து திரிந்தது.

இதற்கு முன்பாகக் கடந்த 29ஆம் திகதியன்றும் இவ்வாறு கரையோரமாகப் பறந்துதிரிந்ததை அவதானிக்க முடிந்தது. (20)

## கிளை திறப்பு

வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தின் பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் கிளை ஒன்று வவுனியா மாவட்ட அரச அதிபரினால் கடந்த வியாழன் பிற்பகல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கண்டியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் வவுனியா மாவட்டத்தில் 17 கிராமங்களிலும் 2 நலன்புரி நிலையங்களிலும் ஏற்கனவே இயங்கி வந்துள்ளது. பெண்கள் சம காலத்தில் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் என்னவென்று அடையாளம் கண்டு அவற்றினை எவ்வாறு தீர்ப்பது என்பது தமது முக்கியபணி என்று கிளையின் உயர் அதிகாரி தெரிவித்தார். இந் நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி,வவுனியா அரசஅதிபர், பொலிசார் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

## 4ஆம் ஆண்டு நினைவில்



அன்னை மடியில்
15
01
1981

மண்ணின் மடியில்
02
11
1999

### லெப். கதிர்

*நாகராசா ஜெயந்தினி*
சோதியா படையணி

பெற்றவற்றில் இளையது பற்று வைத்தாள் மண்ணில்
கற்று முடிக்கமுன் பற்றி விட்டாள் புலியுடன்
விற்றேர்மற்போருடன் சொற்பயிற்சி பல பெற்று
மாற்றானை 'கதிகலக்கி மடிந்தாளாம் வன்னி மண்ணில்

அண்ணர் மாரிருவருடன் அக்கா அத்தான் கூடிக் கொண்டு
கண்மணியை நினைத்து காலமெலாம் அழுகிறார்கள்.
அப்பா அம்மா இதை எப்போதும் பார்க்கலாமோ
எப்போது ஜெயந்தி நீ இப்பூமியில் மீண்(டும்) பிறப்பாய்.

(3723)
குடும்பத்தினர்,
2ஆம் வட்டாரம்,
மு/புதுக்குடியிருப்பு.


# Northern Technology (Pvt) Ltd.

## COMPUTER EASY LOAN PACKAGES

Rs 2900 Package RS 2096/- Per Month for two years

Rs 17900 Package RS 1347/- Per Month for two years

Rs 9900 Package RS 2096/- Per Month for two years

புதிய கணனிகள் கொள்வனவு செய்ய வேண்டுமா?

Rs 7900 Package RS 1847/- Per Month for two years

## Office Package

Intel Pentium 1.8 GHz / Celeron 1.7 Ghz Processor
ASUS/ MSI Mother Board
40 GB Maxtor Hard Disk
256 MB DDR / 128 MB DDR Kingston RAM
15" LG Digital Color Monitor
52X ASUS CD ROM
32 MB VGA Card On Board / OFF Board
Sound Card On Board
3.5 " 1.44 MB Floppy Disk Drive
ATX Full Tower Casing 380 Watts Power
Streao Speaker
PS/2 Keyboard
PS/2 Mouse With Pad

2 Years Warranty

Rs 14900 Package RS 1847/- Per Month for two years

FREE
UPS & DUST COVER
Group Purchasing for 5 Computeres

Option
Intel Original Mother Board
Intel Pentium 2.4 Ghz Processor

Rs 12900 Package RS 1597/- Per Month for two years

Rs 24900 Package RS 1347/- Per Month for two years

Rs 19900 Package RS 1597/- Per Month for two years

(சி-8597)

**Jaffna**
Branch Office:
# 20, Kannathiddy Road,
Jaffna, SriLanka.
Tel. (0094) 21-2225653

**Vavuniya**
Head office:
#52,2nd Cross street,
Vavuniya,sri Lanka.
Tel.(0094) 24.2221649.

**Mannar**
Branch Office:
Hospital Road,
Mannar, sri Lanka.


## கண்டெடுப்பு

ஹசட்வில் குருப் ஆகரபதன என்ற இடத்தைச் சேர்ந்த மருதவீரன் செல்வம் என்பவரின் தேசிய அடையாளஅட்டை கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## கிளி. மாவட்டத்திலிருந்து இருவர் பங்கேற்பு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை தேசிய விளையாட்டு விழா நவம்பர் நேற்று குருநாகல் வெலகெதர மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது. மேற்படி தேசிய விளையாட்டுவிழா மெய்வல்லுனர் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இரு பெண் வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர். தேசிய விளையாட்டு விழாவில் செல்வி. சீ.தாரணி (குண்டு, தட்டு) எறிதல் விளையாட்டு நிகழ்விலும், செல்வி.க.யோகேஸ்வரி ஈட்டி எறிதல் விளையாட்டு நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## முத்திரை விநியோகம்

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் மேற்படி உலருணவு முத்திரைகள் விநியோகம் மேற்கொண்ட போது தவிர்க்க முடியாத காரணங்களால் முத்திரையைப் பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கு எதிர்வரும் 2003.11.03 ஆம் திகதி திங்களன்று பிரதேச செயலகத்தில் காலை 8.30 தொடக்கம் முத்திரைகள் விநியோகிக்கப்படவுள்ளன. எனவே இக்குடும்பங்கள் உரிய ஆவணங்களுடன் குறித்த திகதியில் சமுகமளித்து தமது முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (14)

## இறுதிப்போட்டி

(அலுவலக செய்தியாளர்)

13-07.2000 அன்று சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்.இந்துக்கல்லூரி கணிதப் பிரிவு மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நாளை பி.ப.2.00 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தால் நடாத்தப்படவுள்ளன. இதன தெரிவுப்போட்டியில் 20 வரையான பாடசாலைகள் கலந்துகொண்ட இப்போட்டியில் இறுதிப் போட்டியில் யாழ்.இந்துக்கல்லூரியை எதிர்த்து யா.உடுப்பிட்டி அமெரிக்கமிசன் பாடசாலை மோதவுள்ளன. (சோ)



சிந்தனைக்கு

சமாதான வழிமூலம் எமது மக்களுக்கு நீதி கிடைக்குமானால், நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 02-11-2003

# மக்களின் தேவை கருதி

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டதான இடைக்கால நிர்வாக சபைக்கான -(இடைக்கால தன்னாட்சி அதிகார சபை) திட்ட வரைவு உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டுவிட்டது. தமிழ் மக்கள் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள இத்திட்ட வரைவானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குமக்களது தேவைகளை உடனடியாகப் பூர்த்திசெய்யும் நோக்கில் காலத்தின் தேவையாகியுள்ளது.

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இத்திட்ட வரைவானது வடக்கு-கிழக்கில் வாழும் அனைத்து மக்களினதும் அதாவது இன,மத மற்றும் வேறுபேதங்கள் இன்றி உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் நீதியாகவும் சுதந்திரமாகவும் இடையூறு எதுவுமின்றி ஒரு நிர்வாகத்தை நடத்துவதற்கான நோக்கில் அமையப்பெற்றதொன்றாகும்.

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இத்திட்டவரைவானது அரசாங்கம் முன்னர் முன்வைத்த யோசனைகளிலிருந்து பல்வேறு மாறுபாடுகளைக்கொண்டுள்ளது என்பதை எவருமே புரிந்துகொள்ள முடியும். ஆனால், இத்திட்ட வரைவானது தமிழ் மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் நோக்கத்தினை க்கொண்டிருப்பதே இம் மாறுபாடுகளுக்குக் காரணமாகும்.

விடுதலைப்புலிகள் இத்தகையதொரு திட்டவரைவை முன்வைத்தமைக்கு - கடந்தகால வரலாற்று நிகழ்வுகள் மட்டுமல்ல நிகழ்கால அதாவது ஐ.தே.முன்னணி ஆட்சிக்காலத்து அனுபவங்களதும் அடிப்படையாகும். வேறு வகையில் கூறுவதானால், ஐ.தே. முன்னணி அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளும் அவற்றின் அனுபவங்களும், பெறுபேறுகளும் கூடக்காரணமாகும்.

விடுதலைப்புலிகளுக்கும் ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்பாடு செய்துகொள்ளப்பட்டு 20 மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், இவ் யுத்த நிறுத்த உடன்பாட்டில் காணப்பட்ட சரத்துக்களில் பெரும்பாலானவை இன்னமும் நிறைவுசெய்யப்பட்டதாக இல்லை. அதாவது யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளதே ஒழிய யுத்த சூழ்நிலை என்பதில் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாக இல்லை. தமிழ் மக்கள் மீதான இராணுவ ஆழுத்தம், கெடுபிடிகள் நீங்கவில்லை.

இது ஒருபுறம் இருக்க, விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் வெளிநாடுகளில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதோடு பல இணக்கப்பாடுகளும் ஏற்பட்டிருந்தன. ஆனால், அவை எவையுமே அமுலாக்கம் பெறவில்லை. அதிலும் குறிப்பாக பேச்சுவார்த்தைகள் மூலம் அமைக்கப்பட்ட உபகுழுக்கள் செயலிழந்துபோனமை முக்கியமானதாகும்.

விசேடமாகச் சுட்டிக்காட்டுவதானால் மனிதாபிமான உடனடிப் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிக்காக அமைக்கப்பட்ட 'சிரான்' அமைப்பு செயலிழந்தமையானது யுத்த நிறுத்தத்தினாலோ அன்றி சமாதானப் பேச்சுவார்த்தைகளினாலோ யுத்தத்தினால் முழு அளவில் பாதிக்கப்பட்ட வடக்கு--கிழக்கு மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிட்டுவதற்கு வாய்ப்பற்றுப் போய்விட்டது.

இதன் காரணமாக வடக்கு-கிழக்கில் இயல்பு வாழ்வு என்பதும் சமாதானம் என்பதும் அர்த்தமற்றவையாக வெறும் சொற்பதங்களாகவே தமிழ் மக்களைச் சென்றடைந்திருந்தன. மறுபுறமாக யுத்தத்தினால் சிறிலங்காவில் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கிற்கு அப்பாலுள்ளவர்கள் சமாதானத்தின் பெறுபேறுகளை முழுஅளவில் ஈட்டிக்கொண்டனர். அவர்களின் இயல்பு வாழ்க்கை விரைவிலேயே மீளப்பெறப்பட்டதொன்றாகிவிட்டது.

இந்நிலையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஒன்றிற்கான திட்டவரைவு ஒன்றைப்புலிகள் முன்வைக்கவேண்டியதாகியது. இதனால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியான புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான இடையூறுகள் ஏதுமற்ற இடைக்கால அதிகார சபை ஒன்றை அமைத்தல் என்பதை வலியுறுத்த வேண்டியதாகியது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்புநிலைக்குத் திரும்புவதற்கு இவ் அதிகார சபை அவசியமாகியது.

இவ் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவு குறித்து அரசாங்கத் தரப்பிலிருந்தோ அன்றி பேரினவாத சக்திகள் தரப்பிலிருந்தோ ஆட்சேபங்கள், எதிர்ப்புக்கள் வெளிவரலாம். ஆனால், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் அக்கறைகொண்டவர்கள், இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண விரைபவர்கள் இவ் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை மூலமே அவற்றை எட்டமுடியும் என்பதை நிராகரிக்க முடியாது.

# பௌத்த தர்மம் இன்றைய சூழலுக்குப் பொருந்தாது நாட்டைக்காக்க நாம் வீறுகொண்டு எழுவோம்

## எல்லே குலவன்ச தேரர் அழைப்பு

"எமது பௌத்த தர்மத்தின் உபதேசம் கருணை, காருண்யம், அன்பு என்பதாகும். ஆனால் அந்த உபதேசம் இன்றைய கால கட்டத்துக்கு உதவாது, பொருந்தாது. அந்த உபதேசங்களை அலுமாரியில் பூட்டி வைத்துவிட்டு இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காக நாம் எழுச்சி பெற்று வீறு கொண்டெழ வேண்டும்" என வண. எல்லே குணவன்ச தேரர் கடந்த புதன் கிழமை அனுராதபுரத்தில் நடைபெற்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்க கூட்டத்தில் உரையாற்றும் போது கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் ஆனையிறவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்ட போது போர் புரியப் படைவீரர்கள் இல்லையேயென்று சனாதிபதி தவித்த போது இராணுவத்தில் இருந்து தப்பியோடிய 12 ஆயிரம் படைவீரர்களை ஒன்று சேர்த்து யுத்தக் களத்துக்கு அனுப்பிவைத்தவன் நான் ஒருவன்தான்.

அதே நேரம் யுத்தத்திற்குச் சென்று கைகால்களை இழந்தவர்கள், அங்கவீனராக்கப்பட்டவர்கள் 18000 பேர் உள்ளனர். இவ்வாறு யுத்தம் செய்து உயிர்த் தியாகம் செய்து இரத்தத்தைச் சிந்திய பின்னர், இந்த நாட்டை இரண்டாகக் கூறு போட இடமளிக்க முடியுமா?

நாங்கள் நாட்டைப் பிரிப்பதற்கு எதிரானவர்கள். இந்த நாடு ரணில் விக்கிரமசிங்கவினதும் வேறு எந்த அரசியல் வாதிகளினதும் பரம்பரைச் சொத்தல்ல. இது எமது நாடு நாட்டைப் பிரிக்க நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். உயிரைக் கொடுத்தேனும் நாட்டைக் காப்பாற்றியே தீருவோம்.

பௌத்த பிக்குகளுக்கு இந்நாட்டைப்பற்றிய பாரிய பொறுப்பொன்றுள்ளது. இந்த நாட்டிலுள்ள அரசியல் வாதிகள் பௌத்த பிக்குகளைப் பற்றி குறைத்து மதிப்பீடு செய்கின்றார்கள். முகச் சவரம் செய்து மொட்டை அடித்துவிட்டால் பிக்குகளை மூளை குறைந்தவர்களாகவே மதிப்பிடுகின்றார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

# நீர் விநியோகத்தை தனியார் மயப்படுத்தும் சட்டமூலத்தை எதிர்க்க நடவடிக்கை

## - தொழிற்சங்கங்கள் பல முடிவு

இலங்கையில் நீர் விநியோக நடவடிக்கைகளைத் தனியார் மயப் படுத்தும் நோக்கத்துடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நீர் சேவைகள் மறுசீரமைப்பு சட்ட மூலத்தை தொழிற்சங்கங்கள் எதிர்க்கத் தீர்மானித்துள்ளன.

இந்த சட்டமூலத்தினால் நீர்விநியோகத்தில் தனியார் தலையீடு, முகாமைத்துவத்தில் தனியார் தலையீடு, நீர் வடிகாலமைப்பு சபை உட்பட இத்துறை சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல், பாவனையாளர்களுக்கு நெருக்கடி என்பன காரணமாகவே இந்த சட்டமூலத்தை எதிர்க்க தொழிற் சங்கங்கள் கூடி ஆராய்ந்து வருகின்றன.

புதிய முறையின் கீழ் வீட்டுப் பாவனைக்கு நீரைப் பெறும் நபரொருவர் நியமிக்கப்பட்ட கட்டணத்தை வைப்புச் செய்ய வேண்டும், அத்துடன் வீட்டுப்பாவனைக்குப் பெறும் நீரை வேறு வர்த்தக நடவடிக்கைகளுக்கும் உபயோகிக்கக் கூடாது. அப்படி உபயோகிக்கப்படின் தண்டனையும் ரூ.5000 வரை தண்டப்பணம் அறவிடவும் நீதிமன்றத்திற்கு புதிய அதிகாரம் கிடைக்கும்.

இவையனைத்தையும் ஏற்க தொழிற் சங்கங்கள் நீர் சேவைகள் மறுசீரமைப்பு சட்டமூலத்தை எதிர்க்கத் தீர்மானித்துள்ளனர்.

# மதுபோதையில் வந்த படையினர் பொலிசாரிடையே பலத்த மோதல்

## - பொலிசாரால் பலர் கைது

(கொழும்பு)

கொழும்பு, பாணந்துறை ஆகிய பகுதிகளிலிருந்து மாத்தறை வந்த பொலிஸ், இராணுவம் கடற்படை ஆகியவற்றைச் சேர்ந்த வீரர்களுக்கிடையில் மது போதையில் ஏற்பட்ட மோதலைத் தடுக்கச் சென்ற மாத்தறை பொலிசாரும் தாக்குதலுக்கு இலக்கான சம்பவம் நடந்துள்ளது.

இச்சம்பவத்தில் ஈடபட்ட பதினொரு சந்தேக நபர்களை மாத்தறைப் பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

இவர்களுள் ஒரு கான்ஸ்டபிளிடம் 600 மில்லிகிராம் கஞ்சாவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்த கான்ஸ்டபிள் மாத்தறை நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். இவருக்கு 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிபதி அனுமதியளித்துள்ளார்.

இதேவேளை தாக்குதலில் ஈடுபட்டவர்களில் பதினொரு பேரும் மாத்தறை அரசாங்க வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை இவர்களுள் 10 பேர் அளவுக்கதிகமான மதுபோதையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

# தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கைகள் அனைத்தும் சிங்களத்தில்!

## -மலையக ஆசிரியர் ஒன்றியம் அதிருப்தி

அட்டன் கல்விக் காரியாலயத்தினால் தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற சுற்றறிக்கைகள் மற்றும் ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட கடிதங்கள் என்பன தனிச் சிங்களத்தில் உள்ளமை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள மலையக ஆசிரியர் ஒன்றியம் இவ்விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரச கரும மொழியாக்கல் ஆணைக்குழுவிற்கு மனுவொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அம்மனுவில் குறிப்பிட்டிருப்பது:- அட்டன் கல்வி வலயத்தில் 106 தமிழ் பாடசாலைகளும், 1300 தமிழ் ஆசிரியர்களும், 33 சிங்களப் பாடசாலைகளும்,750 சிங்கள மொழிமூல ஆசிரியர்களும் கடமை புரிகின்றனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட, பிரதிக் கல்விப் பணிப்பாளர், பதினொரு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,நிர்வாகப் பிரிவின் பொறுப்பாளர்கள், பதினொரு எழுதுவினைஞர்கள் அனைவரும் தமிழர்களே.

இந்நிலையில் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் அனுப்பப்படும் கடிதங்களில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகின்றது. இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மலையக ஆசிரியர் ஒன்றியம் கேட்டுள்ளது.

# இங்கிலாந்துடனான தொடரில் ரஸல் ஆர்னோல்ட் இணைப்பு

இங்கிலாந்துடனான கிரிக்கெட் போட்டித் தொடர்களில் விளையாடும் 22 பேர் கொண்ட சிறிலங்கா அணியில் ரஸல் ஆர்னோல்ட், நுவன் சொய்சா ஆகியோர் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் ஜூலை மாதத்துக்குப் பின் னர் அவர் அணியில் இடம்பெற வில்லை. அண்மையில் சிறிலங்கா ஏ அணி கென்ய அணியுடன் விளையா டிய போட்டிகளில் ரஸல் ஆர்னோல்ட் டின் பங்கு சிறப்பாக இருந்ததால் இவர் மீண்டும் இணைக்கப்பட்டார். இதற்கிடையில் விக்கெட் காப்பாளர் ரோமேஷ்களுவித்தாரண காயமடைந் துள்ளதால் அவரின் இடத்துக்கு லங்கா டி சில்வா சேர்க்கப்பட்டுள்ளார்.

கென்ய அணியுடனான போட்டிகளில் துடுப்பாட்டத்தில் சதங்கள் குவித்த ஜெகன் முபாரக் இவ்வணியில் சேர்க்கப்படவில்லை.

இவ்விரு அணிகளின் முதலாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி தம்புள்ள டிங்கிரி விளையாட்டரங்கில் நடைபெறும்.




# இந்திய மகளிர் ஹொக்கி அணி வெற்றி

ஆசிய- ஆபிரிக்க விளையாட்டுப் போட்டித் தொடரில் பெண்கள் ஹொக்கி இறுதிப் போட்டியில் இந்திய அணி தென்னாபிரிக்க அணியை 5-4 என்ற வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற கடும் போட்டியில் முதலாவது பாதியில் எந்த அணியும் கோல் போடாத நிலையில் இரண்டாவது பாதியில் தென்னாபிரிக்க அணி 1 கோலை அடித்து முன்னணியில் இருந்தது. தொடர்ந்து இந்தியாவும் 1கோல் போட்ட போது சமநிலை காணப்பட்டது.

மேலும் 15 நிமிடங்கள் வழங்கப்பட்ட வேளை இரு அணிகளும் கோல் போடவில்லை.

எனவே தண்ட உதை முறை வழங்கப்பட இந்தியா 5 வாய்ப்புக்களில் 4 கோல்களையும் தென்னாபிரிக்க அணி 3 கோல்களையும் போட்டன. இதன்படி இந்திய அணி 5-4 என்ற வீதத்தில் சாம்பியன் பட்டத்தைப் பெற்றது.

## இ.நி.திட்ட...

இரவு அவசர அரசியல்பீட கூட்டத்தை ஒன்றுகூட்டி இன்றைய இடைக் கால திட்டம் பற்றி ஆராய விருந்தது. தேசிய ஐக்கிய முன்னணி தனது கருத்துக்களை இன்று வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சிஹல உறுமய இந்தத் திட்டம் தொடர்பில் தமது கருத்தை வெளியிட்டுள்ளது. கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க கருத்துரைக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனக் குறிப்பிட்டார். சிங்கள முஸ்லிம் மக்களைப் பாதிக்கின்ற தமது அதிகாரத்தை நிறுவிக் கொள்ளும் தமிழீழத் திட்டமே முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார். (32)

## புலிகளின்...

எங்களுடைய மாற்று யோசனைகளை சமர்ப்பித்திருந்த போது இதற்கு முற்றிலும் வித்தியாசமாக எங்களது யோசனைகள் அமையுமென்று கூறியுள்ளார். வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக வரைவை விடுதலைப்புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள நிலையில் முஸ்லிம்களின் யோசனைகளையும் முன்வைக்குமாறு லண்டனில் தங்கியிருக்கும் ரவூப் ஹக்கீமை சிறிலங்காப் பிரதமர் சந்தித்து உரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நாங்கள் சமர்ப்பிக்கும் திட்ட வரைவு பரிசீலனைக்கு எடுத்த பின்னர் தான் ஒரு தீர்வை நாங்கள் எட்ட முடியும் எனவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

## காணி...

தன்னாட்சி அதிகார சபையின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கும். இதுவரையில் இறுதித் தீர்வு எட்டப்படாத இடத்து தேர்தல் நடாத்தப்படும்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் அனைத்து உரிமைகளும் சகல மக்களுக்கும் வழங்கப்படும். எந்தவொரு மதத்திற்கும் விசேட இடம் வழங்கப்படமாட்டாது. மதம், இனம், சாதி, தேசியம் அல்லது பிராந்தியம் என பாகுபாடு காட்டப்படமாட்டாது.

அனைத்துச் சமூகங்களினதும் பாது காப்பு உறுதிசெய்யப்படும்.

மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தற்போதைய சேவைகளும் வசதிகளும் மேம்படுத்தி உயர்த்துதல் தொடர்பான அபிவிருத்தி விரிவாக்கத்தில் உள்ளடங்கலான வருவாய் ஈட்டல், வருமானம், தீர்வையும், சுங்க வரியும், சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணி தொடர்பான அதிகாரங்கள் உள்ளடலங்களாக வடக்கு-கிழக்கை ஆளுகைசெய்வதற்குரிய அனைத்து அதிகாரங்களையும் இச் சபை கொண்டிருக்கும்.

வடக்கு-கிழக்கில் நீதியை நிர்வகிப்பதற்கான தனியான அமைப்புக்கள் உருவாக்கப்படும்.

நிதி ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும். இது வடக்கு-கிழக்கிற்கு ஒதுக்க வேண்டிய நிதியை பரிந்துரைக்கும். வடக்கு-கிழக்கு மீள்கட்டுமான நிதியம்,விசேடநிதியம் என்பன அமைக்கப்படும்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கடன் பெறுவதற்கானதும், உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

இச்சபை ஓர் கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கும்.

தனது சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களை காத்திரமாகச் செயற்படுத்துகையில், மாவட்ட நிர்வாகத்தைச் செயற்படுத்த மாவட்ட குழுக்கள் உருவாக் கப்படும்.

வடக்கு-கிழக்கிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணி தவிர்ந்த ஏனைய எல்லாக் காணிகளையும் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் பொருத்தமான தேவைகளுக்குப் பயன்படுத்துவததைத் தீர்மானிப்ப தற்கான அதி காரத்தை இச்சபை கொண்டிருக்கும்.

ஆயுதப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் மீளளிக்கப்பட வேண்டும். இலங்கை அரசாங்கம் அவர்களுக்கு நஷ்டஈடு கட்டணம் வழங்க வேண்டும்.

கடல் மற்றும் கரையோர வளங்களில் இவ் அதிகார சபை கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். அதே போன்று வடக்கு-கிழக்கிற்கான இயற்கை வளங்கள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும்.

ஆறுகளின் நீர் பாவனைக்கு நியாயமான முறையில் செயற்படுத்தல் வேண்டும்.

## ‘விடுதலைப்புலிகள்’ ஏடு இன்று வெளிவருகிறது

(அலுவலக செய்தியாளர்)

இலங்கைத் தீவின் வடக்குக்-கிழக்கில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை நிறுவுவதற்கான ஓர் உடன்படிக்கைக்கு தமிழ் மக்கள் சார்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைக்கும் ஆலோசனை வரைவு முழுமையாகத் தாங்கி, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான ‘விடுதலைப்புலிகள்’ பத்திரிகை, இடைக்கால அதிகாரசபையை ‘ஏற்றுக் கொள்வதே சவால்கள் நிறைந்த சமாதானத்தில் புதிய அனுகூலத்தை உருவாக்கும் என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகின்றது.

செயலுக்கான தருணம் சிங்கள அரசிற்கு வந்துவிட்டது எனச் சொல்லும் ஆசிரியத் தலையங்கத்தைத் தாங்கிய இவ் ஏடு, சமாதானம் இடைநிரப்பல்ல, கொதிநிலையில் சிங்கள அரசியல் போன்ற அரசியல் கட்டுரைகளையும் தமிழ்-முஸ்லிம் உறவு, அந்த நன்நாள் மலர வேண்டும். கலாநிதி சோமஸ்கந்தன் எழுதிய சிங்களப் படைகளும் தென்தமிழீழப் படுகொலைகளும், அறிவன் எழுதிய போர் சிதைத்த வாழ்வு என இன்னும் பல கட்டுரையும் விழுதுகள், உலைக் களம் போன்ற வழமையான அம்சங்களையும் தாங்கி வெளிவருகின்றது. ‘விடுதலைப் புலிகள்’ ஏட்டின் 111வது குரலாக வெளிவரும் இவ் ஏட்டின் சிறப்பம் சமாக தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு.பா.நடேசன் அவர்களின் சிறப்புப் பேட்டி இடம் பெறுகின்றது. (லோ)

## ஐ.நா...

போர்பியோ, கொழும்பு ஒன்றிணைப்புக் குழுப் பிரதிநிதி ஸ்ரீபன் கிரேஸ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு யுனிசெவ் உடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒன்றிணைந்து நடத்தும் செயற்திட்டங்களில் பூரண திருப்தி அடைந்துள்ளதாக கரோலின் மிக் அக்கி கூறினார்.

இடைக்கால நிர்வாகம் சம்பந்த மான பிரதியொன்றை தமிழ்ச்செல்வன் இவர்களுக்கு வழங்கினார். இப்படி ஒரு திட்டத்தின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியலில் பங்குபற்ற முனைவது திருப்தியளிக்கிறதென அந்தக்குழு கூறியது. சமாதானத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதோடு தொடர்ந்தும் சமாதானப் பேச்சுவா த்தையை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று குழு வேண்டுகோள் விடுத்தது.

## முரண்...

இதன் பலனாக நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவுவதாகவும் அரசாங்கம் மேலும் அறிவித்துள்ளது. நாட்டு மக்கள் பலதரப்பட்ட நன்மைகளைப் பெற்றுள்ளனர் எனவும் அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் சமாதான நடவடிக்கைகளில் முழுஅளவிலான பலன்களும் நாட்டின் தெற்கு, வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அனைவரினாலும் சமமாக பகிர்ந்து கொள்ளப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இதுவரை இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பயனாக முக்கியமான பல விடயங்களில் உடன்பாடு காணப்பட்டுள்ளது. பிரச்சினைக்கு நீதியானதும் சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. நாட்டின் சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் முழு அளவிலான ஆதரவை வழங்கியுள்ளதெனவும் அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, ரணில் இந்தியாவிற்கு அண்மையில் மேற்கொண்ட விஜயத்தின் போது இரு பிரதம மந்திரிகளும் வெளியிட்ட கூட்டறிக்கையில் ஐக்கிய இலங்கை என்ற அமைப்பினுள் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என தெரிவித்தனர். சமாதான நடவடிக்கைகளின்மூலம் பெற்றுக் கொள்ளப்படும். அனுகூலங்களை ஒன்று திரட்டி அவற்றின் அடிப்படையில் முன்னேறிச் செல்வதே அரசின் சவால்கள். அதேவேளை நிலைபேறான தீர்வை அடைவதற்கென எதிர்கால சமாதான நடவடிக்கைகள் உரிய முறையில் வழிநடத்தப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படுவதும் வற்புறுத்தப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைகளில் அடிப்படையில் மேற்கொள் ளப்படவிருக்கும் தீர்மானத்திற்கு மனிதவுரிமைகள், சனநாயகம் உண்மையான அதிகார பரவலாக்கல் என்பன அடிப்படை பெறுமானங்களாக உள்ளன. இடைக்கால நிர்வாகம் சம்பந்தப் பட்ட மட்டில் இவை அனைத்தும் அவசி யமான அதேவேளை தவிர்க்க முடியாத பெறுமானமாக அரசு கருதுகிறதென அரசு விடுத்துள்ளஅறிக்கைமேலும் கூறுகிறது.

## புலி...

தீர்வு ஒன்றுக்கான உடன்படிக்கைகை ஒன்றை ஏற்படுத்துவதற்கு நோக்கமாக கொண்ட சம்பந்தப் பட்டஇருதரப்புக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகும் என்று தாம் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டோக்கியோவில் இவ் ஆண்டு யூன்மாதம்10ஆம்திகதி நடைபெற்ற கொடையாளிகளின் மாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டது போல் சர்வதேச கொடையாளர் சமூகத்துக்கும் சமாதான முயற்சிகளின்கணிசமானமுன்னேற்றத் துக்கும் இடையில் தொடர்பு இருப்பது குறித்தும் ஐரோப்பிய ஒன்றிய தூதரகத் தலைவர்கள் இந் அறிக்கயில் வலியுறுத்தியுள்ளனர்.

## இ.நி.குறித்த

● இதற்கு ஒரு கால வரையறை வைத்துள்ளீர்களா?

எந்தமுயற்சிகளுக்கும் ஒரு காலவரையறைகளைக் குறிப்பிடுவது முயற்சிகளைப் பாதிக்கும் என்று தான் நான் நினைக்கின்றேன். இதுதான் வரலாற்றில் நடந்த நிகழ்வுகளின் அனுபவம். ஆகவே எங்க ளைப் பொறுத்தவரை இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை. தமிழர் தாயகப் பிரதேசங்களில் கடந்த 20வருட காலங்களிற்கு மேலாக யுத்தம் நடந்திருக்கிறது. அவர்களது அடிப்படை ஆதாரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு அந்த மக்கள் பெரிய வாழ்வியல் நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது மனிதாபிமானப் பிரச்சினை எனும் அடிப்படையில் இதற்கு மிக விரைவில் தீர்வு காணப்படவேண்டும் என்பதே எமது கருத்து. நாங்கள் கால வரையறைகளைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை.

● இடைக்கால நிர்வாக சபை தொடர்பான வரைவிலே இலங்கை எனும் இறையாண்மையை மதித்து அதற்குள்ளே ஒரு மாகாணம் அல்லது பிராந்தியம் தனியலகாக இயங்குவது அல்லது சுயாட்சி என அமைக்கப்பட்டுள்ளதா? அல்லது விடுதலைப் புலிகளின் வழமையான ஈழம் எனும் கோரிக்கையின் முதற் படியாக இது ஒரு முக்கிய திருப்பு முனையாக அமையுமா?

☐ நீங்கள் சரியாக ஆலோசனை வரைவை வாசித்தால் எமது உண்மைத்தன்மைகளை புரிந்து கொள்ள முடியும். ஈழம் எனும் கோரிக்கையை நாம் முன்னெடுத்துச் செல்வதானால் நாங்கள் பேச்சுக்களுக்கு வந்திருக்கத் தேவையில்லை. பேச்சுக்களுக்கான முயற்சிகளும் தேவையில்லை. எங்களைப் பொறுத்தவரை வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற மக்களுக்கு நியாயமான அவர்களது அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தீர்வை எட்டுவதற்காகவே நாங்கள் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கின்றோம். இதனடிப்படையில் நாங்கள் இறுதியான அரசியல் தீர்வை எட்டுவதற்கு நீண்டகாலம் எடுக்கும் எனும் வகையில் . இடைக்கால கட்டமைப்பு ஒன்றை நிறுவுவது அவசியம் என்ற நிலையில் தேவை கருதி ஆலோசனை வரைவை முன்வைத் துள்ளோம். ஆகவே இது வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஒரு அதிகாரமுள்ள நிர்வாக அலகை நிறுவுவதற்கான யோசனைகளே தவிர, நீங்கள் கூறுவது போல ஈழம் நோக்கிய முதற் கட்ட நடவடிக்கை என்று அர்த்தம் கொள்வதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது.

● தனித்தமிழ் ஈழம் எனும் கோரிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதா? அல்லது நீண்டகாலப் போக்கில் அது இன்னும் பரிசீலனையில் உள்ளதா?

எங்களிடம் அந்த அதிகாரம் இல்லை. ஏனெனில் 1976ஆம் ஆண்டு வட்டுக் கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து, வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற பெரும் பான்மையான மக்கள் அனைத்து சமாதான அமைதி, சனநாயக வழிமுறைக்கூடாக தாங்கள் அடைய முயன்ற ஒரு தீர்வு முயற்சிகள் அனைத்தும் தோல்வி கண்டுள்ள நிலையில்தான் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக தமிழீழம் என்ற ஒரு நிலைப்பாட்டைஎடுத்தார்கள். 1977 ஆம் ஆண்டு தமிழ் மக்கள்தான் அதற்கான ஆணையைப் பிறப்பித்தார்கள். விடுதலப்புலிகள் அதற்காகப் போராடி வந்தார்கள். தற்போது அமைதிவழியில் மாற்றுத் தீர்வைப் பரிசீலிக்கலாமென்று இலங்கையிலுள்ள மக்களும் சர்வதேச சமூகமும் விரும்பிய காரணத்தால் நாங்கள் இதற்கு முன் வந்துள்ளோம். ஆகவே வரப்போகின்ற மாற்றுத் தீர்வு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய எந்தவகையில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில்தான் அந்த மாற்றங்களைப் பற்றி கருத்துக் கூறக் கூடியதாக இருக்கும். எங்களைப் பொறுத்தவரை வெளிப்படையாக ஒரு மாற்றுத்தீர்வை பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றோம் . எனப் பலதடவை சொல்லி இருக்கின்றோம். பேச்சுவார்த்தைகளிலும் அதற்கான இணக்கப்பாட்டை எட்டி இருக்கின்றோம்.

● தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வைப்பெற்றுக் கொடுப்பதற்காக திட்டவரைவு முன்வைக்கப்பட்டிருக்கின்றது. என்று கூறுகிறீர்கள். இந்நிலையில் அமெரிக்காவுக்குப் பிரதமரின் விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்ன வென்றால் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம் என்று ஆரம்பித்து பல் வேறு நாடுகளிலும் தனது ஆதிக்கத்தை அமெரிக்கா செலுத்திவருகின்றது. சில வேளைகளில் அமெரிக்கா இலங்கையினுடைய இந்தப் பிரதிபலிப்பில் இலங்கைப் பிரதமருடாக சில அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்பட்டால், இதை எதிர்கொள்ள தாங்கள் எவ்வாறு தயாராகுவீர்கள்?

பிரதம மந்திரி அமெரிக்கா சென்றது பல்வேறு நோக்கங்களிற்காக இருக்கலாம். அவர் தான் என்ன நோக்கங்களிற்காக செல்கின்றார் என்பதை எமக்கு அறிவிக்காத சூழ் நிலையில், அது சம்பந்தமான கருத்துக்கள் கூறுவது பொருத்தமாக இருக்காது. எங்க ளைப் பொறுத்தவரையில் சர்வதேச சமூகத் திற்கு ஒன்றைத் தெளிவாகக் கூற விரும்புகின்றோம். தமிழ் மக்களுக்கு ஒரு நீதியான, நியாயமான அவர்கள் நீண்டகாலமாக அவர்கள் பட்ட துன்பங்களிற்கு ஒரு தீர்வாக எட்டும் முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் அனைத்தும் ஆதரவு வழங்கவேண்டும். ஏனெனில் இன்று சர்வதேச சமூகம் சனநாயகம் மனித உரிமை, அரசியல் உரிமைகளைப் பற்றி வலியுறுத்துகின்றது. அந்த அடிப்படையில் அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் இங்கு எடுக்கப்படுகின்ற யதார்த்த பூர்வமான, நீதியான ஒடுக்கப்பட்ட மக்களுடைய அரசியல் உரிமைகளுக்காக தீர்வைக் காணுகின்ற முயற்சிகளுக்கு அவர்கள் ஆதரவை வழங்குவார்கள் என்றுதான் நம்புகின்றேன்.

●இந்தியாவுடன் பிரதமர் ரணில் செய்து கொள்ளவுள்ளதாகக் கூறப்படும் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக?

இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தங்கள் சம்பந்தமாகநாங்கள் ஊடகங்களில் தான் அறிந்து கொண்டோம். அதனுடைய உள்ளடக்கங்கள் உள்ளார்ந்த விடயங்கள் எதுவும் தெளிவாகவில்லை. அந்த நிலையில் நாம் அதுசம்பந்தமாக கருத்துக்கூறவேண்டிய தேவை இல்லை. அதேநேரம் உண்மையிலேயே வடகிழக்கிலே தமிழர் தாயகப் பிரதேசத்திலே ஒடுக்கு முறை, இராணுவ அடக்குமுறை உச்சமடைந்து ஒரு யுத்த சூழ்நிலை அதிக ரித்த காரணத்தாலேயே இலங்கைத் தீவினு டைய பாதுகாப்புநிலை ஒரு சந்தேகத்துக்கும் குழப்பநிலைக்கும் உள்ளானது.

ஆகவே இங்கு இலங்கைத்தீவிற்கு பாதுகாப் பென்பது நாடுகளுடன் செய்யப் படுகின்ற பாதுகாப்பு ஒப்பந்தங்களால் உறுதிப் படுத்த முடியாது. வட கிழக்குப் பிரதேசத் திலே தமிழ் மக்கள் மீதும் தமிழர் பிரதேசத்தின் மீதும் ஏவப்பட்ட யுத்தத்தை நிறுத்தி இந்த மக்களின் மறுக்கப்பட்ட அரசியல் உரிமைகளை ஏற்று வழங்கி இங்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வு வருகின்றபோதுதான் நிரந்தர சமாதானம், அமைதி, அபிவிருத்தி பாதுகாப்பு எல்லாமே இதில்தான் உள்ளடங்கி உள் ளதே தவிர அவற்றில் இல்லை.

ஆகவே சனநாயகத்தையும் மனித உரிமைகளையும் அமைதியையும் விரும்புகின்ற நாடுகள் இதற்காக முயன்று கொண்டிருக்கின்ற இந்த முயற்சிகளுக்குத் தங்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் தர முயல வேண்டும் என்பது தான் எமது மக்களினுடையதும் எமது நிலைப்பாடுமாகும்.

● மூன்றாம்தரப்பாக முஸ்லிம்தரப்பு கலந்து கொள்ளவேண்டும் என்ற பேச்சு அண்மைக்காலமாக எழுந்துள்ளது. பிரதமர் ரணில் டோக்கியோவில் வைத்து கூட கூறியிருக்கிறார். அடுத்த பேச்சுகளில் முஸ்லிம் தரப்புக்கு இடம் வழங்கப்படும் என்று பாராளுமன்றத்திலும் அனைத்து எதிர்க் கட்சிகளும் கூட இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள். நீங்களும் அண்மையில் கூறியிருக்கிறீர்கள் முஸ்லிம் தரப்பு கலந்து கொள்ள இது தருணமல்ல நேரம் வரும் போது அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும் இத்தகைய அழுத்தம் அதிகரித்துவரும் வேளையில் உங்களது நிலைப்பாடு என்ன?

யுத்தம்,யுத்தநிறுத்தம் சமாதானப்பேச்சுக்கள் இந்த வரலாற்றுத் தொடரை மீட்டுப்பார்ப்பது பொருத்தமாக இருக்கும். இரண்டு தரப்புக்கள் தான் பிணக்குகளுக்குள் உட்பட்டதரப்பு தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் தான் நீண்டகாலமாக முரண்பட்ட தரப்புக்கள். நீண்டகாலமாக யுத்தம் செய்த தரப்புக்கள் என்ற வகையில் இன்று சமாதான நடவடிக்கைகளுக்கான ஓர் உகந்த சூழலை ஏற்படுத்துகின்ற தொடர்முயற்சிகள் நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவே எதிர்காலத்திலே நாங்கள் ஒரு தீர்வை எட்டுகின்றபொழுது இடைக்காலதீர்வாக இருக்கலாம் அல்லது நிரந்தரத்தீர்வாக இருக்கலாம். அந்தச் சூழ்நிலைகளில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கும் தாயகப்பிரதேசம் அவர்களுக்கும் அரசியல் அபிலாசைகள் அரசியல்குறிக்கோள்கள் இருக்கின்றது. அந்த அடிப்படையில் ஏனைய சமூகங்களையும் குறிப்பாக முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவப் படுத்த வேண்டிய தேவைகள் அவர்களுடன் பேச வேண்டிய நேரத்திலே அவர்களையும் நாங்கள் அழைத்துப் பேசி பிரச்சினைக்குத்தீர்வு காணுவோம். ஆகவே இந்த தற்போதைய சூழ்நிலையில் இது சம்பந்தமான நிலைப்பாட்டை நாங்கள் உடனடியாக எடுக்கமுடியாது. எதிர்காலத்திலே ஏற்படுகின்ற முன்னேற்றங்கள் செயற்பாடுகளின் அடிப்படையில் தான் இது சம்பந்தமான முடிவை எமது தலைமைப் பீடம் தெளிவாக எடுக்கும். இப்பொழுது இது சம்பந்தமான கருத்துக்களை நாங்கள் முன்வைக்க விரும்பவில்லை.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.